இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 376
சனி, 31 ஜனவரி, 2026 |
பக்கங்கள் 16
www.ilakku.org

# கொக்கட்டிச்சோலை படுகொலை

## 39 ஆண்டுகள் கடந்தும் நீதியில்லை..!



— பா.அரியநேத்திரன்

## சிறிதரன், சுமந்திரனின் முட்டி மோதல்கள்

### ‘தமிழினத்தின் இருப்புக்கே சாபக்கேடு’



விதுரன்

## ஈழத்தமிழரின் இறைமையை பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் ஒடுக்கிய 78வது ஆண்டுக் கரிநாள் 04.02.2026



மூத்த ஆய்வாளர் ஊடகவியலாளர்
சூ.யோ. பற்றிமாகரன்




# மத்திய கிழக்கின் படைவலுச் சமநிலையை மாற்றும் போர்

வேல்ஸில் இருந்து அருஸ்

www.ilakku.org | info@ilakku. org | © 2026 இலக்கு இணையம்

# கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு கோருகிறது தமிழரசுக் கட்சி



“கிவுல் ஓயா திட்டம் மூலம் வவுனியா – முல்லைத்தீவு மாவட்டங்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. எனவே எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை கிவுல் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.” இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். “வன்னி பிரதேசத்தில் கிவுல் ஓயா நீர்த்தேக்கத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குறிப்பாக வவுனியா மற்றும் முல்லைத்தீவில் வாழ்கின்ற மக்களின் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாட்டை முன்னெடுக்கும் நோக்குடனும், எங்களுடைய மக்களின் பொருளாதாரத்தை அழிக்கின்ற செயற்பாடாகவும் இந்தத் திட்டம் அமையவுள்ளது.

அத்தோடு வனவளத்திணைக்களமே குறித்த பிரதேசத்தினுடைய பாரியளவான காட்டை அழிப்பதற்கு உறுதுணையாக இருப்பதற்கும் நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு, பாரிய ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளோம். அதன் அடிப்படையில், இந்த ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நெடுங்கேணி பேருந்து நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே, எமது எதிர்காலத்தைச் சிந்தித்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், பொதுமக்கள் என அனைவரும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுக்கின்றோம்.” – எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கூறினார்.

## பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு நிவாரணம் இல்லை:

### அரசாங்கம் அறிவிப்பு



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டாலும், நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு, எந்தவித நிவாரணமும் வழங்கப்படாது என்று நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து, இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படாதவர்களின் தகவல்கள் இருந்தால், அது குறித்து ஆராய்வதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து, தனியார் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார். அதற்கமைய, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் என பலதரப்பட்ட தரப்புகளும் தங்களுடைய கருத்துகள் மற்றும் யோசனைகளை முன்வைத்து வருகின்றன.

இந்த நிலையில், எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி வரை இதற்கான கால

தொடர்ச்சி: பக்கம் 07

## பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் உடன்படிக்கை கைச்சாத்து!




பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1750 ரூபாவாக உயர்த்துவதற்கான உடன்படிக்கை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சு ஆகியவற்றுக்கிடையே நேற்று (30) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் 2026 பாதீட்டுத் திட்ட யோசனைக்கு அமைவாக, தற்போது வழங்கப்பட்டு வரும் 1,350 ரூபாய் தினசரி சம்பளத்தை 400 ரூபாயால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தோட்டத் தொழிலாளர்களின் புதிய தினசரி சம்பளம் 1,750 ரூபாயாக உயர்கிறது. இந்த 400 ரூபாய் சம்பள அதிகரிப்பில், 200 ரூபாய் பெருந்தோட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும். மிகுதி 200 ரூபாய் அரசாங்கத்தினால் வழங்கப்படும்.

தொடர்ச்சி: பக்கம் 07

## எட்டு ஆண்டுகளுக்குப் பின் பிரித்தானிய பிரதமரின் சீன பயணம்

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பிரித்தானிய தலைவர் மேற்கொள்ளும் முதல் பயணமாக, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், சீன அதிபர் ஜி ஜின்பிங்கை பெய்ஜிங்கில் சந்தித்துள்ளார்.

வியாழக்கிழமை(29) பெய்ஜிங்கின் மக்கள் மண்டபத்தில் நடந்த சந்திப்பைத் தொடர்ந்து, நெருக்கமான மூலோபாய கூட்டாண்மைக்கு இரு தலைவர்களும் அழைப்பு விடுத்தனர்.

சீனாவுடன் வணிகம் செய்வது நடைமுறைக்கு ஏற்ற தேர்வு என்றும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்துடன் “முதிர்ந்த” உறவுக்கான நேரம் இது என்றும் ஸ்டார்மர் தனது பயணத்திற்கு முன்பு கூறினார்.

“இங்கிலாந்துக்கும் சீனாவுக்கும் நீண்டகால, நிலையான மற்றும் விரிவான மூலோபாய கூட்டாண்மை தேவை என்பது எனக்கு நீண்ட காலமாகத் தெளிவாகத் தெரியும்,” என்று ஸ்டார்மர் கூறினார்.

“நல்ல விஷயங்கள் பெரும்பாலும் சிரமங்களுடன் வருகின்றன. நாட்டின் மற்றும் அதன் மக்களின் அடிப்படை நலன்களுக்கு ஏற்ப செய்வது சரியான செயலாக இருக்கும் வரை, தலைவர்கள் சிரமங்களிலிருந்து வெட்கப்பட மாட்டார்கள், துணிச்சலுடன் முன்னேறுவார்கள்” என்று ஜி கூறினார்.

ஜி உடனான ஸ்டார்மரின் சந்திப்பைத் தொடர்ந்து, அன்றைய தினம் சீனப் பிரதமர் லி கியாங்குடனான இரண்டாவது சந்திப்பு நடைபெற இருந்தது. அடுத்ததாக அவர் தனது மூன்று நாள் சீனப் பயணத்தை முடிக்க ஷாங்காய் செல்வார்.



தொடர்ச்சி: பக்கம் 14

## டெஸ்லா நிறுவனம் தனது முதல் சரிவை அறிவித்துள்ளது



மைக்ரோசாப்ட், மெட்டா மற்றும் சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனங்களின் வருவாய் வெளியீடும் பரபரப்பான நாளில், டெஸ்லா நிறுவனம் தனது வருடாந்திர வருவாயில் முதல் சரிவை அறிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் வருவாய் ஆண்டுக்கு 3 சத வீதம் குறைந்து $24.9 பில்லியனாக இருந்ததாக எலோன் மஸ்க்கின் மின்சார கார் நிறுவனம் புதன்கிழமை(28) தெரிவித்துள்ளது. 2025 ஆம் ஆண்டு முழுவதும் வருவாய் $94.8 பில்லியனாக இருந்தது, இது முந்தைய ஆண்டில் $97.7 பில்லியனாக இருந்தது.

இந்த காலாண்டில் நிகர லாபம் 61 சதவீதம் குறைந்து $840 மில்லியனாக இருந்தது, இது ஆண்டுக்கான லாபத்தை $3.8 பில்லியனாகக் குறைத்தது, இது 2024 இல் $7.1 பில்லியனாக இருந்தது.

தொடர்ச்சி: பக்கம் 07

## போலி தொழிலாளர் விசா கறுப்புச் சந்தையாக பிரித்தானியா



போலி திறமையான தொழிலாளர் விசா நடைமுறைகள் பிரித்தானியா முழுவதும் ஒரு கறுப்புச் சந்தையாக செயல்பட்டு வருவதாக தி டைம்ஸ் நடத்திய இரகசிய விசாரணையில் தெரியவந்துள்ளது.

தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 2020 இல் அறிமுகப் படுத்தப்பட்ட திறமையான தொழிலாளர் விசா முறையை சுரண்டுவதற்கான ஒரு வலையமைப்பை அதன் விசாரணை தொடர்ச்சி: பக்கம் 06

## செப்டம்பர் மாதத்திற்குள் லண்டனில் ஓட்டுநர் இல்லாத கார்



அமெரிக்க ஓட்டுநர் இல்லாத கார் நிறுவனமான வேமோ, இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் லண்டனில் ரோபோடாக்ஸி சேவையை இயக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் ஓட்டுநர் இல்லாத டாக்சிகள் நகரத்தில் இயங்குவதற்கு விதிமுறைகளை மாற்ற திட்டமிட்டுள்ளதாக இங்கிலாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கூகிள்-பெற்றோர் ஆல்பாபெட்டுக்குச் சொந்தமான இந்த நிறுவனம், புதன் கிழமை(28) லண்டனின் போக்குவரத்து அருங்காட்சியகத்தில் இங்கிலாந்துக்குக் கொண்டு வந்த கார்களின் தொகுப்பைக் தொடர்ச்சி: பக்கம் 14

 | © 2026 இலக்கு இணையம்

# கனடா தூதுவருடன் சந்தித்த தமிழ்தேசிய கட்சிகள் சொல்லும் செய்தி என்ன?

### பா.அரியநேத்திரன்

கடந்த 28/01/2026 ல் யாழ்ப்பாணத்தில் கனேடிய தூதரகத்தின் இசபெல் மார்ட்டீன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினரை ஒரு தரப்பினராகவும் தமிழ் அரசுக் கட்சியை இரு தரப்பாகவும் சந்தித்தித்துள்ளார்.



இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியுடன் இணைந்து செயல் படப்போவதாக கடந்த 20/01/2026 ல் சங்கு கூட்டணியாக செயல் படும் ஈபிஆர்எல்எவ் சுரேஷ்பிரமச்சந்திரன், ரெலோ செல்வம் அடைக்கலநாதன், புளட் சித்தாத்தன், ஜனநாயக போராளிகள் கட்சி வேந்தன், சமத்துவக்கட்சி சந்திரசேகரம், ஆகியோருடன் தமிழரசுக்கட்சி பதில் தலைவர் சிவஞானம்,பதில் செயலாளர் சுமந்திரன் ஆகியோர் ஊடகத்தில் கருத்துக்கூறி படமும் ஊடகங்களில் வெளிவந்து சரியாக ஏழு தினங்களில் யாழ்ப்பாணத்துக்கு சென்ற கனடா தூதுவரை இவர்களால் ஒற்றுமை யாக சந்திக்க முடியவில்லை.



அவரை சந்தித்து உரையாடும்போது கூட இரண்டு தரப்பும் ஒரே விடயத்தை வலியுறுத்தவில்லை. சங்கு கூட்டணி மாகாணசபை தேர்தலை விரைந்து நடத்த அழுத்தம் கொடுங்கள் என கேட்டனர்.

தமிழரசுக் கட்சி பதில் தலைவரும், பதில் பொதுச் செயலாளரும் கனடா நாட்டில் உள்ள சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் எனக்கேட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் தனியாக சந்தித்து,  தமிழர் தாயக பகுதியின் நிகழ்கால அரசியல் நிலவரங்கள், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள், திட்டமிட்ட தமிழர் நில அபகரிப்புக்கள், கிபுல்ஓயா திட்டம் போன்றவற்றின் ஊடாக தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற விடயங்களை எடுத்துக்கூறினார்.

மூன்று தரப்பாக தமிழரசுக்கட்சியில் இரு அணி, சங்கு கூட்டணியில் ஒரு அணி என மூன்று சந்திப்புக்களுக்கு அவர் நேரத்தை செலவிட்டுள்ளார்.

இவர்களால் ஒரு தரப்பாக தம்மை சந்திக்க இவர்களுக்கு ஒற்றுமையில்லை. மூன்று தரப்புகளும் ஒரு விடயத்தை வலி யுறுத்தவில்லை என்பதை மட்டும் உணர்ந்திருப்பார் அவர்.

இவர்களால் கோரப்பட்ட ஒரு விடயத்தைக்கூட அவரால் செயல்படுத்த முடியுமானால் அதுதான் சரித்திரமாக மாறும். கடந்த 2009-மே18 முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்த பின்னர் 16, வருடங்களாக வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திரிகள், ஜெனிவா சந்திப்புகள் என பல தடவை பேச்சுகளும், வெளிநாட்டு பிரயாணங்களையும் தமிழ்தேசிய கட்சிகளை சேர்ந்த பலர் மேற்கொண்டனர். எனினும் எந்த ஒரு அழுத்தத்தையும் இலங்கை அரசு எதிர் கொண்டதும் இல்லை.

இனப்பிரச்சனைக்கான தீர்வுகள் கிடைத்ததும் இல்லை. இப்போது தமிழ்த்தேசிய கட்சிகள் செய்வது வெளிநாட்டு துதுவர்களை சந்தித்து உரையாடி படங்களை ஊடகங்களில் போடுவதும், சிலர் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருவதுமே அன்றி வேறு எந்தப்பணிகளையும் ஈழத்தமிழர்களுக்காக செய்வதாக இல்லை.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் எப்படியாவது ஆசனங்களை கைப்பற்றுவது மட்டுமே அவர்களின் இலக்காக உள்ளதே அன்றி வேறேதும் இல்லை.

## ஆசிரியர் தலையங்கம் | சனி, 31 ஜனவரி, 2026

### உரையாடல், ராஜதந்திரம், வேறுபாடுகளுக்கு மேலாக எழுதல் இறைமையைப் பேணுவதற்கான இன்றைய உலகின் நடைமுறை

கடந்த வாரத்தில் இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் 20 ஆண்டுகால நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் சுதந்திர வர்த்தக வலய உடன்படிக்கையில் கையொப்பமிட்ட “ஒப்பந்தங்களின் தாய்” என்று பேசப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு புதுடில்லியில் இடம்பெற்றது. இன்றைய சமகாலத்தில் எல்லா உற்பத்திகளுக்கும் அதி முக்கியமானதான செமிக்கண்டக்டர் வழங்கலில் இந்தியாவை இந்த ஒப்பந்தம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மிகப்பெரிய வழங்குநராக மாற்றி, ஐரோப்பிய ஒன்றியத்தின் மேலான அமெரிக்கப் பொருளாதார மேலாண்மையை நிலைகுலைத்துள்ளது. அத்துடன் இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் சுதந்திர வர்த்தக வலயத்துள் இணைந்து கொண்டது. இந்தியாவின் மேல் அமெரிக்கா விதிக்கும் வரிகளின் வழியான பொருளாதாரத் தடைகளைத் தகர்த்து புதிய வேலைவாய்ப்புக்களையும் முதலீடுகளையும் உற்பத்திகளையும் சந்தைப் பெருக்கத்தையும் நெருக்கத்தையும் பெருமளவில்  இந்தியா பெறுவதற்கான வாயில் திறக்கப்பட்டுள்ளது. கனடாவும் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்ய இருப்பது இந்தியாவுக்கு மேலும் வளத்தையும் பலத்தையும் அளிக்கவுள்ளது.

இவை எல்லாம் ஈழத்தமிழர்களுக்கும் அவர்கள் உரையாடல்கள் ராஜதந்திரம் வழியாக ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினையை விளக்கவும் தாயகப் பொருளாதார தேவைகளைத் தெளிவாக்கவும் வேண்டுமென்ற அழைப்பை விடுக்கிறது என்பது இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது. உதாரணமாக இவ்வாரத்தில் எது உரையாடலுக்கு முக்கியமானதென்று பார்ப்போம். வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாரம்பரிய தமிழ்க்கிராமங்களான வெடிவைத்த கல்லு, ஈச்சங்குளம், கூழாங்குளம், காஞ்சூர மோட்டை, பூவரசங்குளம், கிராமங்களை உள்ளடக்கிய 400 ஏக்கருக்கும் மேற்பட்ட குடியிருப்புக்களுடன் கூடிய விவசாய நிலங்களும் 1921ம் ஆண்டில் ஒதுக்குக் காடாக வர்த்தமானிப்படுத்தப்பட்ட பெரியகட்டிக்குளம் 4000 ஏக்கர் நிலமும், தொல்லியல் பகுதிகள் என அறிவிக்கப்பட்ட 47 இடங்களும் தண்ணீரில் மூழ்கக் கூடிய வகையில் 3023 சிங்களக் குடியேற்றக் குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைக்கிறது. இதனை உலக மயமாக்கி பாதிக்கப்படும் ஈழத்தமிழர்களுக்கான நீதியை கிடைக்கச் செய்வது இவ்வார உரையாடலுக்கான கடமையாகவுள்ளது.

மேலும் கடந்த டிசம்பர் மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தால் தொடங்கப்பெற்ற மேர்க்கசோ (Mercosur) எனச் சுருக்கமாக அழைக்கப்படும் பிரேசில், ஆர்ஜென்டினா, உருக்குவே, பராக்குவே, பொலிவியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தென்னமெரிக்காவின் பொதுச்சந்தையுடனான உடன்படிக்கையும் பிரான்சு உட்பட பல ஐரோப்பிய நாடுகளின் மக்களின் எதிர்ப்புக்களையும் தாண்டி கடந்த வாரத்தில் கைச்சாத்தாகியதன் மூலம் ட்ரம்பின் கோட்டையாக அவர் கருதும் இலத்தீன் அமெரிக்க நாட்டுப் பிரதேசத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் பாதுகாப்புக்கு அமெரிக்க அணுவாயுதக்குடை கீழ் நிற்காது தனக்கான ஐரோப்பிய இராணுவத்தை அமைத்துத் தனது பொருளாதார வளர்ச்சியைத் தனியாகப் பெறும் நிலை தோன்றியுள்ளது. இதற்கு உதாரணமாக கிறீன்லாந்தை ஐரோப்பிய ஒன்றியமும் பிரித்தானியாவும் இணைந்து தொடர்ந்தும் டென்மார்க்கினுடையதாகவே உறுதிப்படுத்தியுள்ளன.

ஐரோப்பிய நாடுகளின் இந்த தனித்துவத்தைத் தக்க வைத்த வெற்றிக்கு அவைகளின் ஒன்றிணைந்து பணியாற்றும் ஒருமைப்பாட்டுப்போக்கும் உரையாடல்களும் இராஜதந்திரங்களுமே காரணமாகின.  இதே ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் வாழும் ஈழத்தமிழர்கள் தங்கள் கண்ணுக்கு முன்னால் எவ்வாறு ஒருமைப்பாடு வெற்றிக்கான தளம் என்பதை புரிந்து கொள்ள இவை உதவுமென்பது இலக்கின் எண்ணம்.

இவ்வாரத்தில் பெப்ரவரி 4ம் நாள் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் 1948இல் ஈழத் தமிழரின் மேல் நவகாலனித்துவமாகச் சிங்களப்பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளமன்ற முறைமை ஆட்சிமுறையைத் திணித்துச் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சியை நவகாலனித்துவ ஆட்சியாக ஏற்படுத்தி தனது காலனித்துவ ஆட்சியை விலக்கிக்கொண்ட நாள். ஈழத்தமிழர்கள் சிங்கள அரசுக்களின் இனஅழிப்பு வாழ்வுக்கு உள்ளாவதற்கு  பிரித்தானியா உருவாக்கிய இந்த நவகாலனித்துவ அரச முறைமையே காரணம். இதனால் இந்நாளை ஈழத்தமிழர்கள் கரி நாளாக 1948 முதல் இன்றுவரை 78 ஆண்டுகள் தொடர்ந்து கடைப்பிடித்து தங்களுடைய தன்னாட்சி உரிமைக்காக உலகநாடுகளிடமும் மக்களிடமும் கோரி வருகின்றனர்.

அந்த வகையில் 2026 பெப்ரவரி 4ம் நாளில் உலகெங்கும் ஈழத்தமிழர்கள் நடாத்தும் ‘கரி நாள்’ பேரணிகளில் பெருமளவில் இணைந்து ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமைக்காக ஒருமைப்பாட்டுடன் குரல் கொடுப்பதிலாவது ஈழத்தமிழர்கள் தங்களுக்கு இடையில் உள்ள “வேறுபாடுகளுக்கு மேலாக எழுந்து” ஈழத்தமிழர்கள் தேசமாகப் பயணிக்கத் தொடங்கிவிட்டார்கள் என உலகிற்கு வெளிப்படுத்தும் ராஜதந்திரச் செயற்பாட்டை செய்ய வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது. ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பினை தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்காது தடுப்பதற்கான பலமான குரலாகவும் இந்தப் பேரணிகளை அமைக்க வேண்டிய அதே நேரத்தில் தாயகத்திலும் உலகெங்கும் ஏக்கிய இராச்சியம் குறித்த நோக்கையும் போக்கையும் மக்களுக்கு விளக்கத் தக்க முறையில் கருத்தரங்கங்களும் மாநாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

வேறுபாடுகளுக்கு மேலாக எழுதல்” என்பது அரசியல் தத்துவமாகச் சீனாவுக்கு எட்டு ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் 60 வர்த்தக மற்றும் பண்பாட்டுத்தலைவர்களைத் தன்னு டன் பரிவாரமாக அழைத்துச் சென்ற பிரித்தானிய பிரதமர் கியர் ஸ்டாமர் அவர்களும், சீனாவின் அரசத்தலைவர் ஜி ஜின்பிங் அவர்களும் இணைந்து 29.01.26 இல் கூறியுள்ளனர்.  “வேறுபாடு களுக்கு மேலாக எழுதல்” என்ற இந்த அரசியல் அழைப்பை ஈழத்தமிழர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளல் அவசியம். அதாவது இன்றைய உலகில் அரசியல் ‘அதிகாரத்தைத் தக்க வைத்தல்’  என்பதைத் தலைமைச் செல்நெறியாகக் கொண்டுள்ளது.அவ்வாறே பொருளாதாரம் ‘வர்த்தகப் போட்டியிடலையே’ தலைமைச் செல்நெறியாகக் கொண்டுள்ளது. இந்நிலையில் அதிகாரத்தைத் தக்கவைத்தலுக்காக எந்த அழிவையும் செய்தலும் வர்த்தகத்தை உறுதிப்படுத்தக் கழுத்தறுப்புப் போட்டியிடுதலும்’  இன்றைய உலகினை அனைத்துலகச் சட்டங்கள் ஒழுங்குகள் ஏதுமற்ற உலகாக மாற்றியுள்ளது. இதற்கு இவ்வார உதாரணம் ஈரான் மீதான ட்ரம்பின் “ஒப்பந்தம் செய் - இல்லையேல் தாக்கியழிப்போம்” என்னும் எச்சரிப்பு.

இதனால் இந்த எதார்த்த நிலையை விலத்திட முடியாது என்ற நிலையில்தான்  “வேறுபாடுகளுக்கு மேலாக எழுதல்” என்பதே நடைமுறைச் சாத்தியமாகும் எனச் சீன பிரித்தானிய தலைமைகள் இணைந்து கூறியுள்ளனர்.. அதாவது வேறுபாடுகள் வேறுபாடுகளாகவே தொடர அவற்றுக்கு நடுவில் அறிவினையும் ஆற்றலையும் தொழில்நுட்பத்தையம் பகிர்வதன் மூலம் தமக்குத் தேவையான வளர்ச்சிகளில் இணைதல் நாடுகளுக்கு மட்டுமல்ல ஈழத்தமிழர்கள் போன்ற தேச இனங்களுக்கும் முக்கியமானதாகிறது. ஈழத்தமிழரின் இளைய சமுதாயத்தின் உலகளாவிய இருப்பை ஈழத்தமிழரின் தாயக இளையவர்களுடன் இணைப்பதற்கான முயற்சிகள் வழியாகவே இதனைச் செய்யலாம் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது. அதுவும் பில்கேட் அவர்கள் கூறியது போல் இன்றைய காலம் “வேகவளர்ச்சியின் யுகம்” என்பதால் காலந்தாழ்த்தாது இதனைச் செய்யவேண்டும். மேலும்  “விருப்புள்ளவர் கூட்டணி” என்ற உத்தியைப் பிரித்தானியப் பிரதமர் உக்ரேனுக்கு உதவும் விடயத்தில் கட்டமைத்த முன்மாதிரியைப் பின்பற்றி ஈழத்தமிழரும் தங்கள் இடையிலான வேறுபாடுகள் வேறுபாடுகளாகவே இருக்க கட்டமைக்கப்படும் பொது விடயத்தில் ஒருங்கிணைந்து “வேறுபாடுகளுக்கு மேலாக எழுதல்” என்பதை பழக்கப்படுத்தி வழக்கப்படுத்த வேண்டுமென்பது இலக்கின் இறுதி எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# ஈழத்தமிழரின் இறைமையை பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் ஒடுக்கிய

# 78வது ஆண்டுக் கரிநாள் 04.02.2026



- பிரித்தானிய காலனித்துவ ஆட்சி உருவாக்கிய ஈழத்தமிழர் மேலான சிங்கள பௌத்த நவகாலனித்துவ ஆட்சி உருவான 78 வது ஆண்டு
- 78 ஆண்டுகளாக இந்த ஆட்சியே ஈழத்தமிழின அழிப்பின் மூலகாரணி
- ஐ.நா. வின் சிறப்புப் பிரதிநிதி ஈழத்தமிழர்களுக்கு நியமிக்கப்பட வேண்டும்
- சுதந்திரம் வழங்கப்பட்ட முறை குறித்த மக்கள் தீர்ப்பாயம் தேவை

மூத்த ஆய்வாளர் ஊடகவியலாளர்
**சூ.யோ. பற்றிமாகரன்**

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை இலங்கைத் தீவில் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் இந்த மண் எங்களின் சொந்த மண்' என்கின்ற தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் உலகின் மூத்த குடிகளில் ஒருவராகிய இலங்கைத் தீவின் தேச இன மக்களாகிய ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.




இலங்கைத் தீவில் வரலாற்றுத் தொடக்கக் காலம் முதலாக ஈழத்தமிழர்களின் அரசுக்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்பட்டாலம் 13ம் நூற்றாண்டு முதலான நவீன அரசான யாழ்ப்பாண அரசே உலக அங்கீகாரத்தைப் பெற்ற அரசாக உள்ளமை வரலாறு. இந்த யாழ்ப்பாண அரசின் இறைமையை 1621 இல் போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சியாளர்கள் 1505 முதல் 1621 வரையான 116 ஆண்டு கால முயற்சியின் பின்னர் கைப்பற்றினர். ஆயினும் ஈழத்தமிழர்கள் போர்த்துக்கேயரிடமிருந்து விடுபடுவதற்கான முயற்சிகள் ஈழத்தமிழர் பண்பாட்டைப் பேணுதல் வழியாகத் தொடர்ந்து கொண்டே இருந்தனர்.

1658 இல் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரை நெதர்லாந்து டச்சுக்காரர் கைப்பற்றியதால் அவர்கள் போர்த்துக்கேய காலனித்துவ அரசிடம் 37 ஆண்டுகள் இருந்த யாழ்ப்பாண அரசின் இறைமையையும் கைப்பறற்றனர். ஆயினும் ஈழத்தமிழர்களின் பண்பாட்டைப் பேணுதல் வழியாக விடுபடும் முயற்சி டச்சு ஆட்சியிலும் தொடர்ந்தது.

1796 இல், 31.12.1600 இல் முதலாவது எலிசபேத் மகாராணியின் அரசாணையின் கீழ் உருவாக்கப்பட்ட இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனியினர் டச்சுக்காரிடமிருந்து கைப்பற்றினர். இத்தீவின் ஆட்சியை 1802இல் பிரித்தானிய பேரரசு முடிக்குரிய காலனித்துவ நாடாக அறிவித்தது. இந்த பிரித்தானிய காலனித்துவ ஆட்சியார்கள் தங்களின் ஆட்சிச் செலவைக்குறைப்பதற்காகவும், ஒரே தன்மையான நீதிமுறைமையை நடைமுறைப் படுத்துவதற்காகவும் ஒரே நிர்வாகத்தை நடத்துவதற்காகவும் மக்களின் விருப்பு; பெறப்படாது அதுவரை இல்லாத முறைமையாக ஒற்றையாட்சி உடைய சிலோன் என்னும் செயற்கையான நாடாகவும் சிலனிஸ் என்ற செயற்கையான தேசமக்களாகவும், 1833இல் கோல்புறூக் கமரோன் சீர்திருத்தத்தின் மூலம் அறிவித்து தமக்கான காலனித்துவ ஆட்சியைப் பலப்படுத்தினர்.

இன்றைய கொழும்பு றோயல் கல்லூரியும் கோல்புறூக் கமரோன் சீர்திருத்தத்தில் பிரித்தானியர் தங்களுக்கான கல்வி முறைமையைக் கட்டமைக்க 1835 ஏற்படுத்திய ஒன்றாகவே உள்ளது. 120 பேரை பிரித்தானிய சிவில் சேவையாளர்களாக இணைவதற்கு றோயல் கல்லூரிமூலம் வழிகாட்டப்பட்டது. இது ஆங்கிலம் படித்த கற்றோர் குழாத்து சனநாயக ஆட்சி முறைமைக்கும் ஆங்கிலேய ஆட்சியாளர்ளையும் மக்களையும் இணைக்கும் முகவர்களாகச் செயற்படுவதற்கான முறையில் பயிற்றுவிக்கப்படவும் வித்திடப்பட்டது. தமிழர்களினதும் சிங்களவர்களினதும் தனித்தனி அரசுக்கள் ஐந்து மகாணங்களாக இணைக்கப்பட்டு 25 மாவட்டங்கள் அதற்குள் உருவாக்கப்பட்டு ஒற்றையாட்சியில் வுருமானத்தை பெருக்குவதற்காக ஒரே நிர்வாகமும் ஒரே நிதிமுறைமையும் இலங்கை முழுவதற்கும் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறாக ஈழத்தமிழர்களின் இறைமையுள்ள தாயகத்தின் நிலமும் தேசியமும் தன்னாட்சி உரிமையும் சிங்களவர்களின் நிலத்துடனும் தேசியத்துடனும் தன்னாட்சி உடனும் இணைக்கப்பட்ட வரலாற்றுத் தவறை கோல்புறூக் கமரோன் சீர்திருத்தம் செய்தது. இச்சீர்திருத்தத்தின் வழி உருவாகப்பட்ட சட்டவாக்க சபைக்கு 09 உத்தியோக பிரதிநிதிகளும் 06 உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகளுமாகப் 15 பேர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். 06 உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளில் 03 ஐரோப்பியர்களும் 01 சிங்களவரும் 01 தமிழரும் 01 பறங்கியரும் நியமிக்கப்பட்டு சிங்கள தமிழர் இலங்கையின் சமமான தேசமக்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டது. ஆயினும் சட்டசபையில் ஆட்சியாளர்களால் கொண்டு வரப்படும் எதற்கும் வெறுமனே ஆலோசனை வழங்கும் உரிமை மட்டுமே அளிக்கப்பட்டது.

1908 இல் சேர் யேம்ஸ் பீரிஸ்சால் கீழ்தேச உற்பத்தியாளர் கிளப், சிலாப கிளப் யாழ்ப்பாண கிளப் என்பவற்றின் சார்பாக உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தொகையை அதிகரிக்கமாறும் தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுமாறும் இனவாரிப் பிரதிநிதித்துவ நியமன முறையை கைவிட்டு மாவட்ட ரீதியில் பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறும் பொன்னம்பலம் இராமநாதன பொன்னம்பலம் அருணாசலம் போன்ற தமிழ்த்தலைமைகளுடன் இணைந்து வலியுறுத்தினார்.

இதனடிப்படையில் 1910 இல் கிறு மக்கலம் சீர்திருத்தத்தின் மூலம் ஆங்கிலம் படித்த சிலனிஸ_க்கு சட்டசபையில படித்த சொத்துடைமையுள்ள ஆண்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கபடும் பிரதிநிதியாக அமரும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் சாதாரண மக்களினதும் பெண்களினதும் சனநாயகப் பங்களிப்பு மறுக்கப்பட்டு படித்த சொத்;;துடைமை உள்ளவர்களின் பிரதிநிதித்துவ பங்களிப்பு ஊக்குவிக்கப்ட்டது. இதன் விளைவாக 1910 இன் புதிய சட்டவாக்கசபையில் 11 உத்தியோக அலுவலர்களும் 10 உத்தியோகப் பற்றற்ற அலுவலர்களும் அமைந்தனர்.

இந்த உத்தியோகப் பற்றவர்களில் 04 பேருக்கு சபையில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையும் ஆறுபேருக்கு நியமன உரிமையும் அளிக்கப்பட்டது. வாக்குரிமை பெறற்வர்களில் ஒருவர் பறங்கியராகவும் இருவர் ஐரோப்பியராகவும் ஒருவர் மட்டும் படித்த சிலனிஸ் ஆகவம் கடடமைக்கப்பட்டது. இதனால் 1910 இல் படித்த சொத்துடைமையுள்ள பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொன்னம்பலம் இராமநாதனுக்கு அந்த உரிமை கிடைத்தது.

நாடெங்கும் தவறணைகள் திறக்கப்பட்டு மதுவிற்பனையை அதிகரித்தமைக்கு எதிரான நாடு தழுவிய 1912ம் ஆண்டு மதுப்பாவனை எதிர்ப்புப் போராட்டமும், 1915 சிங்கள முஸ்லீம் கலவரமும் 1919 இல் இலங்கை தேசிய காங்கிரசை தொடங்க வைத்தது.

பொன்னம்பலம் அருணாசலம் இதன் தலைவராக 1919 இல் தெரிவு செய்யப்பட்டாலும் சிங்கள பௌத்த தெசிய வாதத்தின் எழுச்சி காரணமாக 1920 இல் அவர் வெளியேறி தமிழர் மகாசபையை தோற்றுவித்து தமிழ்த்தேசியத்தினை முன்னெடுக்க வேண்டி வந்தது தன்னாட்சிக்கான கோரிக்கையும் தமிழரால் தொடங்கப் பெற்றது. ஆயினும் 1902இல் மன்னிங் சீர்திருத்தத்தின் மூலம் சட்டசபையில் 37 பேர் கட்டமைக்கப்பட்டு 14 உத்தியோக அலுவலர்களும் 23 உத்தியோகப் பற்றற்ற அலுவலர்களும் அவர்களில் 7 பேர் நியமிக்கப்பட்டும் 14 பேர் வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்டும் பிரதநிதித்துவத்தில் ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை வீழச்சியடைந்தது.




இந்நிலையில் 1924ம் ஆண்டின் மன்னிங்கின் இரண்டாவது சட்டசபை 49 பிரதிநிதிகளை கொண்டதாக மாற்றப்பட்டு 12 பேர் உத்தியோக அலுவலர்களாகவும் 37 பேர் உத்தியோகப் பற்றற்றவர்களாகவும் அவர்களில் 29 பேர் வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படுபவர்களாகவும் 08 பேர் நியமனம் பெறுபவர்களாகவும் மாற்றப்பட்டு கண்டிச் சிங்களவர்கள் கரையோரச் சிங்களவர்கள் தமிழர்கள் மலையகத் தமிழர்கள் முஸ்லீம்கள் பறங்கியர் மலேயர்கள் எனப் பிரித்தாளும் தந்திர அரசியலும் வேகப்படுத்தப்பட்டு இதன் விளைவாக சிங்கள பௌத்த மேலாண்மை சட்டசபையில் தோற்றம் பெற்றது. அடுத்து வந்த டொனமூர் சீர்திருத்தம் ஈழத்தமிழரின் சிங்களவர்களின் அரசுக்களின் நிலப்பரப்பு என்பதை முற்றாக நிராகரித்து முழு இலங்கையாக 18

**தொடர்ச்சி: பக்கம் 10**

# சிறிதரன், சுமந்திரனின் முட்டி மோதல்கள்



## ‘தமிழினத்தின் இருப்புக்கே சாபக்கேடு’

விதுரன்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் பூதாகரமாக வெளிப்பட்டிருக்கும் உட்கட்சிப் பூசல்கள் வெறுமனே இரு தனிநபர்களுக்கு இடையிலான மோதல் என்பதைத் தாண்டி, ஒட்டுமொத்த தமிழினத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் நெருக்கடிகள் நிறைந்தவொரு விடயமாக உருவெடுத்துள்ளது.

சிறிதரனுக்கும், சுமந்திரனுக்கும் இடையிலான முட்டிமோதல்கள் தமிழ்த் தேசியக் கொள்கை முரண்பாடு போன்று முலாமிடமுயன்றாலும் அது இரு தனிநபர்களுக்கு இடையிலான அதிகாரமோகத்தால் எழுந்துள்ள முரண்பாடுகளே என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அரசியலமைப்புப் பேரவையிலிருந்து விலகுமாறு சுமந்திரன் விடுத்த உத்தரவும், அதற்கு சிறிதரன் அளித்துள்ள பதிலும் அவ்விடத்தினைச் சூழ்ந்து அரங்கேறும் காய்நகர்த்தல்களும் கட்சியின் எதிர்காலத்தை முட்டுச்சந்துக்குள் நிறுத்தியுள்ளது.

இந்த நிலைமையின் பின்னணி தசாப்தங்களைக் கடந்தது. 2015ஆம் ஆண்டு முதன் முதலாக தேர்தல் களம் கண்ட சுமந்திரன் வெற்றி பெறுவதற்காக சிறிதரனின் அறிவகம் அலுவலகத்துக்குப் படியேறிச் சென்றபோது, அங்கே சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

அதிலொன்று தான், கட்சியின் தலைமையை சிறிதரன் வகிப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பதாகும். அதன் பின்னணியில் தான், அரசியல் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகராக சுமந்திரனை சிறிதரன்பொதுவெளியில் விளித்திருந்தார்.

ஆனால் தேர்தல் நிறைவடைந்ததும் சிறிதரனுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை சுமந்திரன் நிறைவேற்றுவதற்கு பதிலாக, கட்சியின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டையும் ‘சம்பந்தன்’ என்ற தனிமனிதனைக் கைக்குள் வைத்துக் கொண்டு அவரின் சிரேஷ்டத்துவத்தைப் பயன்படுத்தி கையாள ஆரம்பித்தார்.

அதிலிருந்து ஏற்பட்ட பனிப்போர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை உட்பட புதியநிர்வாகத்தெரிவு தேர்தல் மூலம் இடம்பெறுவதற்கு வழிசமைத்திருந்தது.

2024ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி இலங்கைத் தமிழரசுகட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறிதரன் தெரிவுசெய்யப்படவும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுமந்திரன் தோல்வி அடைந்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே கட்சித் தலைமைக்கான தீவிர பிரச்சாரங்களை முடித்துவிட்டு ‘நானே தலைவர்’ என்ற மனோநிலையில் டிசம்பரில் குடும்பத்துடன் நத்தார் பண்டிகை விடுமுறையைக் கழிப்பதற்காக நியூசிலாந்து சென்றிருந்தவர் சுமந்திரன்.

ஆனால் கட்சித் தலைமைக்கான தேர்தலில் அவருடைய எதிர்பார்ப்பு முழுமையாக சிதைந்தது. அவர் நாட்டில் இல்லாத ஒருமாதத்தில் சிறிதரன் மேற்கொண்ட பிரச்சாரம் அனைத்தையும் தலைகீழாக மாற்றியது.

இந்த சூழலை முகங்கொடுப்பதற்கு சுமந்திரன் தயாராக இருக்கவில்லை. அவரது குழுவினரும் கூடத்தான். விளைவு புதியதலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறிதரனுக்கு பதவியை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கான மாநாட்டைநடத்தியிருக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை. கூடவே நீதிமன்றத்தில் புதிய தெரிவுக்கு எதிராக வழக்குகளும் போடப்பட்டன.

இதனால் சிறிதரன், சுமந்திரன் இடையேயான இடைவெளி அதிகரித்தது. பொதுவெளியில் பரஸ்பரம் இருவரும் விமர்சித்துக்கொள்ளும் நிலைமைகளும் உருவாகின. சிறிதரன் தலைவராக தெரிவு செய்யப்பட்டும் இரண்டு ஆண்டுகளாக அப்பதவியை வகிக்க முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டது.



சிறிதரனின் கோட்டையாக கருதப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கென ஒரு அணியை உருவாக்கியதோடு அதனைப்பயன்படுத்தி சிறிதரனுக்கு எதிரான விமர்சனங்களை தீவிரப்படுத்தினார். யாழ்ப்பாணம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அவ்விதமான சூழல் உருவாக்கப்பட்டது.

கட்சியின் மத்திய குழுவிலும், அரசியல் குழுவிலும் சிறிதரனுக்கு காணப்பட்ட ஆதரவை மெல்லமெல்ல மாற்றியமைக்க ஆரம்பித்தார். கூடவே வைத்தியர் சத்தியலிங்கத்தை பொதுச்செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யவைத்து, அப்பதவியில் சுமந்திரன் அமர்ந்தார்.

‘பதில்’ பொதுச்செயலாளராக இருந்தாலும் கூட, கட்சியின் அனைத்து விடயங்களுக்குமான ‘கையொப்ப’ அதிகாரம் அவரிடத்தில் சென்றதால் இயல்பாகவே சுமந்திரனிடத்தில் கட்சியின் ஒட்டுமொத்த அதிகாரமும் சென்றடைந்தது.

இந்நிலையில் 2024இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சிறிதரன் போட்டியிடுவதற்காக ஆசன ஒதுக்கீட்டைச் செய்வதில் இழுபறியை ஏற்படுத்தினார். இருப்பினும் களச்சூழல் சிறிதரனுக்கான வாய்ப்பை பெற்றுக் கொடுத்தது.

அதன் பிரகாரம், சிறிதரன் தேர்தலில் வெற்றி பெற்றார்.சுமந்திரன்யாழ்.தேர்தல் மாவட்டத்தில் ஒட்டுமொத்த வேட்பாளர் அணியையும் தனக்கு சாதகமாக களமிறக்கிய போதும் அவரால் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை.

இப்பின்னணியில் சிறிதரனைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பமாகின. அதற்காக சுமந்திரனின் ஆதரவு அணி களமிறக்கப்பட்டது. சமூக ஊடகங்கள் முதல் மரபு ரீதியான ஊடகங்கள் வரையில் எதிர்ப்பு பிரச்சாரம் தீவிரப்படுத்தப்பட்டது.

சிறிதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பனிப்போர் பகிரங்கமானது. தென்னிலங்கையிலும், இராசதந்திர மட்டங்களிலும் இரு தலைவர்களையும் தனித்தனியாக சந்திக்கும் நிலைமைகளும் தோற்றம் பெற்றிருந்தன.

இப்படியொரு சூழலில் தான் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக, சிறிதரன் அரசியலமைப்புப் பேரவையில் அரசாங்கத்தின் பரிந்துரைகளுக்கு ஆதரவாக எட்டுச் சந்தர்ப்பங்களில் வாக்களித்தமை மற்றும் இராணுவப் பின்னணிகொண்டவர்களின் நியமனங்களை ஆதரித்தமை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அவர் இராணுவமயமாக்கலுக்குத் துணைபோவதாக கட்சியின் மத்திய குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து சிறிதரன் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றுஅழுத்தமளிப்பதென்று தீர்மானமும் சிறிதரன் இல்லாத மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் தார்மீகரீதியாக வலுவானவையாகத் தோன்றினாலும், இதற்குப் பின்னால் இருக்கும் தனிநபர் அரசியல் உள்நோக்கங்கள் மற்றும் தமிழரசுக் கட்சியின் கடந்தகாலச் செயற்பாடுகள் இந்த விவகாரத்தைச் சிக்கலாக்குகின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த காலங்களில், குறிப்பாக மைத்திரி ரணில் கூட்டாட்சி அரசாங்கத்தின் போது, பலசர்ச்சைக்குரிய தீர்மானங்களுக்கு ஆதரவளித்த வரலாற்றைக் கொண்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் சட்டத்திருத்தம், ஒற்றையாட்சி அரசியலமைப்பு இடைக்கால அறிக்கையை தயாரித்தமை உட்பட பல விடயங்களில் பிரதான எதிர்க்கட்சி என்ற வகிபாகத்தில் இருந்து கொண்டு நெகிழ்வுத்தன்மையை காண்பித்தது. இது அதன் வாக்கு வங்கியைக் கணிசமாகப் பாதித்திருக்கிறது என்பது பிறிதொரு விடயம்.

எவ்வாறாயினும், தமிழரசுக்கட்சியின் அத்தகைய முடிவுகளின் மூளையாகச் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரன் என்பது வெளிப்படையானது. அத்தகைய சுமந்திரன் தற்போது அதே காரணங்களை முன்வைத்து சிறிதரனை ஓரம் கட்ட முனைவது அரசியல் முரண்பாடாகும். சிறிதரன் மீதான

தொடர்ச்சி: பக்கம் 14

# கொக்கட்டிச்சோலை படுகொலை

## 39 ஆண்டுகள் கடந்தும் நீதியில்லை.!



பா.அரியநேத்திரன்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இடம் பெற்ற கிழக்கு மாகாணத்தில் மிகப்பாரிய இனப்படுகொலை கொக்கட்டிச்சோலை படுகொலையாகும். இது தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு உட்பட சர்வ தேச சமூகம் இலங்கை அரசு மீது அவ்வேளை வன்மையான கண்டனத்தை வெளியிட்டிருந்த படுகொலையின் 39 வது ஆண்டு நினைவு கடந்த 2026 ஜனவரி 28 நாள் வழமை போன்று அந்த நினைவுத்தூபி அமைந்துள்ள மகிழடித்தீவு சந்தியில் நினைவு கூரப்பட்டது.



1987 ஜனவரி 28ம் நாள் அன்று அதிகாலை வடக்குப்பக்கம் வவுணதீவு பாலம் ஊடாகவும், தெற்குப்பக்கம் பட்டிருப்புபாலம்ஊடாகவும்,மேற்குப்பக்கம்பாலையடிவட்டை வெல்லாவெளி ஊடாகவும் மூன்று முனைகளில் இராணுவப்படையணிகள் கவசவாகனம் பீரங்கி பூட்டிய வாகனங்களுடன் படுவான்கரைபெருநிலத்தைநோக்கி நகர்ந்து வேட்டுக்களை தீர்த்த வண்ணம் பிரதான சந்திகளில் இராணுவத்தை இறக்கி அந்த வீதிகளில் சென்றவர்கள் மீது வயல்களில் வேலை செய்தவர்கள் மீதும் துப்பாக்கி சூடுகளை நடத்தியவண்ணம் பேரிரச்சலுடன் வட்டம் இட்டன.

இதனால் அச்சத்தால் முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை பகுதிகளை சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் பெரியவர்கள் எல்லோரும் தமக்கு பாதுகாப்பு அரணாக முதலைக்குடா வாவியை அண்டிய அமரிக்கன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கிய “இறால்வளர்ப்பு பண்ணை” யில் தஞ்சம் அடைந்தனர்.

அந்த பண்ணையில் தொழில் புரியும் அலுவலர்கள், ஊழியர்களும் அங்கு சமூகமாய் இருந்தனர். வயல்களில் அறுவடை செய்தவர்கள் வீதியால் சென்றவர்கள் என பலபேரை கண்ட கண்ட இடத்தில் சுட்டுக் கொலை செய்த வண்ணம் கோர முகத்துடன் மணற்பிட்டி சந்தியை கடந்து கொக்கட்டிச்சோலை ஊரை அண்டியதும் அங்கு பிரபல தனியார் வைத்தியசாலையை நடத்திவரும் வைத்திய கலாநிதி கந்தையா என்ற பெரியவர் படையினருடன் ஆங்கிலத்தில் உரையாடியபோது அவரையும் அவரின் இளைய மகனையும் அதே இடத்தில் சுட்டுக் கொலை செய்து விட்டு ஈற்றில் இறால் பண்ணைக்கு நுழைந்தவர்கள் அங்கு நின்ற அனைவரையும் சுட்டுக்கொன்றனர்.

அன்று மாலைநேரம் இரால் பண்ணையில் இறந்தவர்களின் உடலங்களை ஒவ்வொன்றாக உழவு இயந்திரத்தில் ஏற்றி மகிழடித்தீவு சந்தியில் வேலிக்கட்டைகளை அடுக்குவது போன்று பரப்பில் வைத்து அவர்களில் சிலர் கைகளில் அணிந்திருந்த மோதிரம் மற்றும் சட்டைபைகளில் இருந்த பணம் பொருட்களை எடுத்துவிட்டு மீண்டும் உழவு இயந்திரங்களில் உடலங்களை ஏற்றி அம்பிளாந்துறை தாமரைப்பூ சந்தி முருகன் கோயிலுக்கு முன் குவித்து பக்கத்தில் இருந்த ஒலை வீட்டு கூரையை பிரித்து சடலங்களுக்கு மேல் போட்டு பெற்றோல் தெளித்து எரிக்கப்படனர்.

இந்த படுகொலையில் இரால் வளர்ப்பு பண்ணையில் மட்டும் 87,தமிழர்களும், இறால் வளர்ப்பு தவிர்ந்த படுவான்கரை பெருநிலம் ஊர் வயல் வாடி கிராமங்கள் என அனைத்து இடங்களிலும் பலர் கொலை செய்யப்பட்டனர்.

இந்த படுகொலை தொடர்பாக சுதந்திரமான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு பிரஜைகள் குழு கோரிய போதிலும் அதனை அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு நிராகரித்திருந்திருந்தது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது.



இந்த படுகொலை சம்பவம் தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு உட்பட சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது அவ்வேளை வன்மையான கண்டனத்தை வெளியிட்டிருந்தன.

இதன் பின்னர் செரன்டிப் நிறுவனம் தமது இறால் பண்ணை தொழிலாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அமெரிக்க வொஷிங்டன் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இச்சம்பவங்களின் நேரடி சாட்சிகளை அமெரிக்காவிற்கு அழைத்து சென்று சாட்சி சொல்ல வைத்தனர். ஆனால் இலங்கை அரசாங்கம் இவ்வழக்கிற்கு சமூகமளிக்கவில்லை. இதில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள் என்றும் அவர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அமெரிக்க செரன்டிப் நிறுவனம், இறந்த தமது ஊழியர்களின் குடும்பங்களுக்கு மட்டும் தலா 60 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்கியது. ஆனால் ஏனைய பொதுமக்கள் எவருக்கும் இலங்கை அரசாங்கம் இறந்தவர்களுக்கோ காயமடைந்தவர்களுக்கோ நஷ்டஈட்டை வழங்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன கிழக்கு மாகாணத்தில் நடத்திய மிகப்பெரிய இன அழிப்பாக அப்போது இது பேசப்பட்டது.

சர்வதேசம் கண்டணம் மட்டுமே தெரிவித்தது. எந்த நீதி விசாரணையும் இலங்கையில் இல்லாமல் காலம் கடந்து இன்று 39 வருடங்கள் கடந்த நிலையிலும் அதற்கான சர்வதேச நீதியோ, உள்நாட்டு நீதியோ இதுவரை இல்லை.



இந்த படுகொலைச் சம்பவம் இடம் பெற்று சரியாக 14 வருடங்களின் பின்னர் 1991 ஜூன் மாதம் 12ஆம் திகதி இடம் பெற்ற மற்றுமோர் படுகொலைச் சம்பவத்தில் மகிழடித்தீவு ஊரில் அரங்கேறியது. இராணுவத்தினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட 152 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

இந்த படுகொலை சம்பவத்துக்கு அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராசசிங்கம் சர்வதேச சமூகம் முன் மகிழடித்தீவு படுகொலையை கொண்டு சென்றதால் ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது. இலங்கை அரசை சர்வதேசம் கண்டித்தது. ஆனால் எந்த நீதியும் அதற்கு கிடைக்கவில்லை.

1987 ஜனவரி 28 ம் திகதி இடம்பெற்ற கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள், 1992 ஜூன் 12ம் திகதி இடம்பெற்ற மகிழடித்தீவுப் படுகொலைகள் நினவாகவே 2000ஆம் ஆண்டு மகிழடித்தீவுச் சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நினைவுத்தூபி அமைக்கப்பட்டது.

இந்த தூபியில் உயிர் நீத்த எல்லோரினதும் பெயர்கள் அதில் இடம் பெறாவிட்டாலும் அந்த காலப்பகுதியில் கிடைத்த பெயர்கள் மட்டும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1987 முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன தொடங்கிவைத்த தமிழின அழிப்பு அவருக்கு பின்னர் ஜனாதிபதிகளாக இருந்த ஆர். பிரமதாச, விஜயதுங்க, சந்திரிகா, மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில் வரை நீண்டு சென்று தற்போதைய ஜனாதிபதி அநுராவரை கட்டமைக்கப்பட்ட இனவழிப்பாக தொடர்வதைக் காணலாம்.

யார் ஆட்சியில் அமர்ந்தாலும் இலங்கையிலும் நீதியில்லை, சர்வதேசத்திலும் நீதி கிடைக்காத இனமாகவே தமிழ் இனம் உள்ளது.

• • •

# தமிழ் , முஸ்லிம்களின் ஒற்றுமை பலமானது என்பது நிரூபணம்




கின்னியான்

ஈழத்தைப் பொறுத்தமட்டில் கடந்த கால வரலாறுகளை பார்க்கின்ற போது தமிழ்,முஸ்லிம் தலைமைத்துவங்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்த சாட்சியங்களை, பல அண்மைக்கால நிகழ்வுகள் கூட எடுத்துக் காட்டுகின்றன.

இதன் அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அண்மையில் கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் இடம் பெற்ற நூல் வெளியீட்டின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பற்றிய சில கருத்துக்களை கூறியுள்ளார்.

அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் சில கருத்துக்களை இங்கு பார்க்கலாம்

“ இந்த சூழலில் கடந்தகால விடயங்களைப் பற்றி பேசுவது மனதிற்கு ஒரு சுவையான விடயம். 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 திகதி வடபுலத்தில் இருந்து முஸ்லிம்களை விரட்டுவதாக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து இங்கு தலைமை வகிக்கின்ற சகோதரர் என்.எம் அமீன் , விடுதலைப் புலிகளின் தலைவரிடம், அவர் சமாதான பேச்சுவார்த்தைக்கு சென்ற சூழலில் அன்றைய செய்தியாளர் மாநாட்டில் ஒரு பிரபலமான கேள்வியை எழுப்பினார். அந்த கேள்வி எழுப்பப்பட்டபோது விடுதலைப் புலிகளின் தலைவர் அங்குமிங்குமாக பார்த்துவிட்டு, அவருடைய மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திடம்கூட எதையும் பேசவில்லை, எடுத்த எடுப்பில் சொன்ன விடயம் “அது ஒரு துன்பியல் சம்பவம், அதைப்பற்றி நாங்கள் இதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லை” என்பது இன்று ஒரு வரலாற்று பதிவாக மாறிவிட்டது.

இன்னுமொரு சுவாரஸ்யமான சம்பவத்தை நான் உங்களிடத்தில் சொல்ல வேண்டும், வேறு எந்த பொது மேடையிலும் இதை சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை, தனிப்பட்ட முறையில் பலரிடம் இதை நான் சொல்லியிருக்கிறேன்.

விடுதலைப் புலிகளின் தலைவரை நான் சமரசப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் சார்பில் அவரையும், அவருடைய குழுவினரையும் சந்திப்பதற்கான ஏற்பாட்டை நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் செய்த சமயத்தில் எங்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் ஒரு சாமான்யமான வரவேற்பு அல்ல. ஒரு நாட்டுத் தலைவரை வரவேற்கிறமாதிரி எங்களுக்கு வீதியெங்கிலும் இரு புறத்திலும் புலிகளுடைய பெண் போராளிகள் அவர்களுடைய மரியாதை நிமித்தம், எல்லோரும் அடிக்கிற சலியூட் அல்ல வலது கையை நெஞ்சுக்கு நேராக செங்குத்தாக வைத்து சலியூட் தெரிவித்தார்கள். இப்படி ஒவ்வொரு 50 அடி தூரத்திலும் ஒருவராக நின்று எங்களுக்கு பெரியதொரு மரியாதை அளிக்கப்பட்டது.

கைலாகு கொடுத்து விடுதலைப் புலிகளின் தலைவரை நேருக்கு நேர் சந்தித்து பேச்சுவார்த்தை தொடங்கி கிட்டத்தட்ட நான்கு-ஐந்து மணித்தியாலங்கள் நாங்கள் கதைத்திருப்போம். யாரும் எதிர்பார்க்காத மிகப் பெரிய ஒரு விருந்துபசாரம் நடந்தது.

பேச்சுவார்த்தை நடுவில் இன்னுமொரு முக்கியமான விடயமும் நடந்தது. நண்பகல் 12.20 மட்டில் பேச்சுவார்த்தையின் இடை நடுவில் விடுதலைப் புலிகளின் தலைவர் சொன்னார் “இப்பொழுது நாங்கள் பேச்சுவார்த்தையை கொஞ்சம் இடைநிறுத்தி உங்களுடைய தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது, நீங்கள் தொழுவதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறோம், தொழுதுவிட்டு வாருங்கள்” என்றார்.

இவ்வாறாக கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் ரவூப் ஹக்கீம் பேசியிருப்பது என்றும் முஸ்லீம் சமூகத்தை அரவணைக்க கூடிய ஒரு தலைவனாக விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் இருந்துள்ளார் என்பது இங்கு சான்று பகிர்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் மதக் கடமைகள்,வியாபார நடவடிக்கைகள் தொடர்பிலும் நன்கறிந்த தலைவராக இருப்பதை இங்கு மேலும் ரவூப் கக்கீம் எடுத்து கூறியுள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் ஒன்றிய திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் எம்.எம்.முக்தார் இது குறித்து தெரிவிக்கையில்” தமிழீழ விடுதலை புலிகளின் தலைவருடன் சுமூகமான பேச்சுவார்த்தை மற்றும் யாழ்ப்பாண முஸ்லிம்களின் நிலை தொடர்பில் ஒரு கட்சியின் தலைமை அங்கு பேசுவதை அங்கீகரித்து வரவேற்பளிப்பதாக நாம் காண்கிறோம். அங்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் விருந்துபசாரம்,எமது தொழுகை மற்றும் வரவேற்பளிப்பு தொடர்பிலும் வியாபாரிகள் மீதான வரி அறவீடு நிறுத்தம் தொடர்பிலும் பேசியதை நாமும் வரவேற்கிறோம். இவ்வாறான உறவுகள் மூலம் தமிழ் முஸ்லிம் சமூகம் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

மேலும் அப்போதைய சமாதான தூதுவர் எரிக்சொல்கெய்ம் ஊடான பேச்சுவார்த்தை முஸ்லிம் தரப்புக்களை ஒன்றிணைத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. இதுபோன்று அப்போதைய அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மூலமான பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் கூறியிருப்பது முஸ்லிம், தமிழ் சமூகம் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை மகிழ்ச்சியாக தெரிவிப்பதோடு வாழ்த்துக்களையும் இந்த தருணத்தில் தெரிவிக்கிறேன்.

இன விரிசலற்ற முறையில் இவ்வாறான நினைவுகளை பேசியிருப்பதும் வரவேற்கத்தக்கது. எனவே தான் தற்போதுள்ள அரசியல் தலைமைகள் தமிழ், முஸ்லிம்கள் ஒன்றிணைந்து பயணித்தால் சிறப்பாக அமையும்” எனவும் தெரிவித்தார்.

வடகிழக்கு என்பது தமிழ்,முஸ்லிம் சமூகத்தின் தளமாக காணப்படுவதுடன். இன சகோதரத்துவம் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் போன்றவர்களின் கருத்தாகும் .

இவ்வாறான நிலையில் இது குறித்து திருகோணமலையை சேர்ந்த ஏ.காசிம் தெரிவிக்கையில் “முஸ்லிம் சமூகம் ஊடாக தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை மேற்கோள் காட்டி பேசியிருப்பது விடுதலை புலிகள் அமைப்பின் தலைவரின் கலந்துரையாடல் மூலமான வரிகளை தலைவர் ஹக்கீம் எடுத்து கூறியிருப்பதை காட்டுகிறது.

யாழ் முஸ்லிம்களின் வெளியேற்றமும் எம்மால் மறக்க முடியாது போனாலும் இவ்வாறான பேச்சுவார்த்தை சமூகத்தின் விடுதலை ஒற்றுமைக்கான அடித்தளமாக காணப்படுகிறது. வடகிழக்கில் ஒற்றுமைப்பட்ட சமூகமாக நாம் வாழ்வதை விரும்புகிறோம்.எனவே தான் இவ்வாறான கடந்த கால நினைவூட்டல்கள் சிறுபான்மை தலைமைத்துவங்களின் ஒற்றுமையை எடுத்து காட்டுகிறது”

ஒட்டுமொத்தமாக தமிழ் சமூகம் பட்ட துன்ப துயரங்களை யாழ்ப்பாண முஸ்லிம்கள் யுத்த காலத்தில் குறிப்பாக 1990 களில் அனுபவித்தார்கள். இதனை மீட்டி பார்க்க வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் “வடகிழக்கில் இலங்கையின் வடமாகாண முஸ்லிம் மக்கள் வலிந்து வெளியேற்றப்பட்ட துயரத்தின் 35 ஆவது வருடம் இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ்-முஸ்லிம் சக வாழ்வும் அரசியல் மன்னிப்பு கோரலும்” என்ற கருப்பொருளின் கீழ் நினைகளை நடாத்தியது. இதில் விடுதலை புலிகளின் தலைவரின் நினைவுபடுத்தல்களும் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறாக முஸ்லிம் சமூகத்தை தாங்கள் எதிர்க்கவில்லை ஒற்றுமையாக பயணிப்போம் என்பதை 20 வருடங்களுக்கு முன்னர் பேசியிருப்பது தற்போதைய ரவூப் ஹக்கீமின் உரையில் இருந்து புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

• • •

## போலி தொழிலாளர் ... தொடர்ச்சி...

அம்பலப்படுத்தியதாக செவ்வாயன்று(27) டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், முகவர்கள் விண்ணப்பதாரரின் ஐடியை எடுத்து ஊதியம் மற்றும் வரி பதிவுகளை உருவாக்குவதற்கு முன்பு ஒரு CoS ஐ வழங்குவதாக கூறப்படுகிறது. ஆவணத்தில், புலம் பெயர்ந்தவர் திறமையானவராகவும், நல்ல ஊதியம் பெற்றவராகவும், திறமையான தொழிலாளர் விசாவிற்கு தகுதியுடையவராகவும் குறிப்பிடப்படுகின்றார் என்று டைம்ஸ் தெரிவித்துள்ளது.

உண்மையில், “ஊதியம் மட்டுமே” உண்மையான வேலையை அவர்கள் வழங்குவதில்லை, விசா வழங்கப்பட்டவுடன் புலம்பெயர்ந்தோரை வேறு பணிகளுக்கு கட்டாயப்படுத்துகின்றனர். அவர்கள் போலி ஊதியம் மற்றும் கூடுதல் கட்டணங்களை திருப்பிச் செலுத்த வேண்டும், சில நேரங்களில் ஒரு மாதத்திற்கு நூற்றுக் கணக்கான பவுண்டுகள் அல்லது ஸ்பான் சர்ஷிப்பை இழக்கும் அபாயம் உள்ளது.

போலி வேலை விசாக்கள் £20,000 ($27,500) வரை செலவாகும் என்றும், முக்கியமாக நாடுகடத்தல் அல்லது நுழைவுத் தடைகளை எதிர்கொள்ளும் நபர்களாலும், விசாக்கள் காலாவதியான பிறகு தங்க விரும்பும் வெளிநாட்டு மாணவர்களாலும் இந்த விசாக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. ஒப்பந்தங்களை ஏற்பாடு செய்வதற்கு முகவர்கள் பணத்தை பெறுகிறார்கள்.

டைம்ஸ் தனது நான்கு மாத விசாரணையில், ரகசிய படப்பிடிப்பையும் பெருமளவான விசா முகவர்களுடனான நேர்காணல்களையும் பயன்படுத்தி, 250 க்கும் மேற்பட்ட போலி வேலைகள் வழங்கப்படுவதை ஆவணப்படுத்தியதாக கூறியது, பெரும்பாலும் சமூக ஊடகங்கள் வழியாக இது நடைபெறுகின்றது. மோசடி திட்டத்தின் முழு நோக்கம் தெளிவாக இல்லை.

இந்த மோசடி குறித்து அவசர விசாரணையைத் தொடங்குவதாக உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது. “இந்த சட்டவிரோத நடவடிக்கையை நாங்கள் விசாரித்து வருகிறோம், இது பொறுத்துக்கொள்ளப்படாது” என்று அது தி டைம்ஸிடம் தெரிவித்துள்ளது.

## டெஸ்லா நிறுவனம் ... தொடர்ச்சி...

மேலும் தொழில்நுட்ப நிறுவனங்களான மைக்ரோசாப்ட், மெட்டா மற்றும் சாம்சங் ஆகியவை பங்குதாரர்களுக்கு அளித்த சமீபத்திய அறிக்கைகளில் வலுவான வருவாயைப் பதிவு செய்துள்ளன.

முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராமின் தாய் நிறுவனமான மெட்டா, அக்டோபர்-டிசம்பர் காலகட்டத்தில் $59.9 பில்லியன் வருவாயில் $22.8 பில்லியன் லாபத்தைப் பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 6 சதவீதம் உயர்வு.

மைக்ரோசாப்ட், இறுதி காலாண்டில் லாபம் 60 சதவீதம் உயர்ந்து $38.5 பில்லியனாக உயர்ந்துள்ளதாகக் கூறியது, இது $81.3 பில்லியன் வருவாயின் அடிப்படையில் அமைந்துள்ளது.

வலுவான வருவாய் இருந்தபோதிலும், மூலதனச் செலவு இரண்டாவது காலாண்டில் சாதனை அளவில் $37.5 பில்லியனை எட்டியதாக மைக்ரோசாப்ட் அறிவித்துள்ளது, AI முதலீட்டு குமிழியின் அச்சத்தால் பங்கு விலைகள் கடுமையாகக் குறைந்தன.

உலகளவில் குறைக்கடத்திகளின் (மெமரி சிப்களின்) மிகப்பெரிய உற்பத்தியாளரான சாம்சங் எலக்ட்ரானிக்ஸ், 93.8 டிரில்லியன் வோன் ($65.6 பில்லியன்) வருவாயில் 20.1 டிரில்லியன் வோன் ($13.98 பில்லியன்) லாபம் ஈட்டியதாக அறிவித்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட மூன்று மடங்கு அதிகம்.

## பயங்கரவாதத் தடை ... தொடர்ச்சி...

அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். அதற்கு பின்னர், சட்ட வரைபு குழுவை கூட்டி, அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஊழலை நிரூபித்தால் ... தொடர்ச்சி...

இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் நிதி அமைச்சின் ஊடாக 5 பில்லியன் ரூபாயை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளதாக அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இதன்போது, பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சுனில் பொஹெலியத்த கருத்துத் தெரிவிக்கையில், இந்தச் சம்பள உயர்வுத் திட்டம் 2025 ஜனவரி 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாகக் குறிப்பிட்டார்.

# ஆளுமையும் செயற்றிறனும் அற்ற தலைவர்களால் சீரழியும் தமிழரசுக்கட்சி





**தமிழரசுக் கட்சி தமிழ் அரசியலில் நீண்ட காலமாக முக்கிய இடம் பெற்ற பழம்பெரும் கட்சியாகும். தந்தை செல்வநாயகம் உருவாக்கிய இந்தக் கட்சி, வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதியாக செயல்பட்டது.**

**ஆனால் 2009க்கு பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், உட் கட்சி பிளவுகள், தலைமைக் குழப்பங்கள், கொழும்பு மையஅரசியல் போக்கு போன்ற காரணங்களால், தமிழரசுக் கட்சி இன்று பலவீனமடைந்துள்ளதாக விமர்சனங்கள்எழுகின்றன.**

**இந்த நிலை குறித்து அரசியல் ஆய்வாளர் மகாசேனனுடன் நடைபெற்ற உரையாடலே இந் நேர்காணல்.**

**கேள்வி :**

**தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலையை நீங்கள் எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்?**

**பதில் :**

தமிழரசுக் கட்சி இன்று ஒரு தீவிர நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. ஒருகாலத்தில் வடக்கு-கிழக்கு தமிழ்மக்களின் அரசியல் முகமாக இருந்த கட்சி, இன்று உட் கட்சி பிளவுகள், தலைமைத் தகராறுகள் மற்றும் அரசியல் திசை மாற்றங்களால் பலவீனமடைந்துள்ளது.

இந்த வீழ்ச்சி வெறும் ஒரு கட்சியின் பிரச்சனை அல்ல. அது முழு தமிழ் தேசிய அரசியலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்நிகழ்வாகும். ஏனெனில் தமிழரசுக் கட்சி தமிழ் தேசிய அரசியலின் அடிப்படை கட்டமைப்பாக நீண்ட காலம்செயல்பட்டது.

**கேள்வி :**

**2009க்கு பிறகு தமிழரசுக் கட்சியில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் என்ன?**

**பதில் :**

2009க்கு பிறகு தமிழரசுக் கட்சி தனது அரசியல் திசையை மாற்றத் தொடங்கியது. முன்பு தமிழ் தேசிய அடையாளத்தைமையமாகக் கொண்ட அரசியல் இருந்தது. ஆனால் பின்னர் கொழும்பு மைய அரசியலை நோக்கி நகரும் போக்குஅதிகரித்தது.

அதாவது, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தேவைகளை மையமாகக் கொள்ளாமல், மத்திய அரசியலுடன்இணங்கும் அணுகுமுறை உருவானது. இது தமிழ் தேசிய அரசியலின் அடிப்படை நோக்கத்துக்கு எதிரானதாகும்.

**கேள்வி :**

**சுமந்திரனின் அரசியல் பங்கு குறித்து உங்கள் பார்வை என்ன?**

**பதில் :**

சுமந்திரன் தமிழரசுக் கட்சிக்குள் முக்கிய அதிகாரத்தை பெற்றவர். அவர் சட்ட அறிவையும் அரசியல் திறமையையும்பயன்படுத்தி, கட்சியின் அரசியல் திசையை மாற்ற முயற்சித்துள்ளார்.

அவர் கொழும்பு மைய அரசியலை முன்னெடுத்து வரும் தலைவராக பார்க்கப்படுகிறார். இதனால் கட்சிக்குள் பலர்அவருக்கு எதிராக விமர்சனம் முன்வைத்தனர். ஆனால் நடைமுறையில் அவருக்கு எதிராக வலுவான அரசியல் எதிர்ப்புஉருவாகவில்லை.

இதற்கு காரணம், கட்சிக்குள் பலர் அரசியல் துணிச்சல் இல்லாமல் செயல்பட்டதுதான்.

**கேள்வி :**

**சிறிதரன் தலைமையிலிருந்தால் கட்சியின் அரசியல் போக்கு எப்படி இருந்திருக்கும்?**

**உயிரோடைத்தமிழ்வானொலிக்கு மகாசேனன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர் காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**பதில் :**

சிறிதரன் தலைமையிலிருந்தால், தமிழரசுக் கட்சி வடக்கு-கிழக்கு மைய அரசியலுக்கு அதிக முக்கியத்துவம்கொடுத்திருக்கும்.

அவர் அரசியல் அடையாளம் தமிழ் தேசிய அரசியலுடன் நெருக்கமாக இணைந்தது. அவரது வாக்கு வங்கி வடக்கு-கிழக்கு பகுதிகளிலேயே உள்ளது. எனவே அவர் கொழும்பு மைய அரசியலை விட தமிழ் தேசிய அரசியலை முன்னெடுத்திருப்பார். இதனால் கட்சியின் அரசியல் திசை வேறுபட்டிருக்கும்.

**கேள்வி :**

**கட்சிக்குள் ஜனநாயகம் உண்மையிலேயே செயல்படுகிறதா?**

**பதில் :**

கட்சிக்குள் ஜனநாயகம் பெயரளவில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் சில நபர்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

மத்திய குழு, தலைமைத் தேர்தல் போன்ற அமைப்புகள் இருந்தாலும், அவை உண்மையான ஜனநாயகத்தைபிரதிபலிப்பதில்லை. பலர் சுமந்திரனின் செயல்பாடுகளை எதிர்க்காமல் மௌனம் காத்தனர்.

ஒரே நபர் கட்சியின் அரசியல் திசையை தீர்மானிக்கும் நிலை உருவானது. இது கட்சியின் அடிப்படைஜனநாயகத்துக்கு எதிரானது.

**கேள்வி :**

**தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சி தமிழ் தேசிய அரசியலுக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது?**

**பதில் :**

தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சி தமிழ் தேசிய அரசியலின் அடிப்படை சக்தியை பலவீனப்படுத்துகிறது.

மாற்று அரசியல் சக்திகள் உருவாகவில்லை. தமிழ் தேசிய அரசியல் ஒருங்கிணைந்த வடிவில் செயல்பட முடியாத நிலைஏற்பட்டுள்ளது. இதனால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படாமல் போகும் அபாயம் உள்ளது.

**கேள்வி :**

**கட்சிக்குள் எதிர்ப்பாளர்கள் ஏன் வலுவாக செயல்படவில்லை?**

**பதில் :**

கட்சிக்குள் பலர் அரசியல் துணிச்சல் இல்லாமல் செயற்பட்டனர். சட்ட நுணுக்கங்களை பயன்படுத்துவதில் அவர்கள்பலவீனமாக இருந்தனர்.

சுமந்திரன் சட்ட அறிவைப் பயன்படுத்தி கட்சிக்குள் தனது ஆதிக்கத்தை உருவாக்கினார். அவருக்கு எதிராக செயற்பட வேண்டியவர்கள் அமைதியாக இருந்தனர். இதுவே கட்சியின் முக்கிய பலவீனம்.

**கேள்வி :**

**மத அடிப்படையிலான குற்றச்சாட்டுகள் குறித்து உங்கள் கருத்து என்ன?**

**பதில் :**

தமிழ் தேசிய அரசியல் மத முரண்பாடுகளாக மாறக்கூடாது. தமிழ் சமூகம் மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்ட சமூகமாக உள்ளது. கிறிஸ்தவர்கள், சைவர்கள், முஸ்லிம்கள்அனைவரும் தமிழ் தேசிய அரசியலில் பங்குபெற்றுள்ளனர்.

தனிநபர் குற்றச்சாட்டுகளை மத அரசியலாக மாற்றுவது மிக ஆபத்தானது. அது தமிழ் தேசிய அரசியலைப் பிளவுபடுத்தும்.

**கேள்வி :**

**கடந்த கால அரசியல் முடிவுகள் இன்று ஏற்படுத்திய விளைவுகள் என்ன?**

**பதில் :**

கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி எடுத்த பல அரசியல் முடிவுகள் இன்று பிரச்சனைகளுக்கு காரணமாகியுள்ளது.

சில சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்கிய முடிவுகள், தமிழ் மக்களின் அரசியல் நம்பிக்கையை பாதித்தன. தமிழ் தேசிய அரசியலின் அடிப்படை கொள்கைகள் மெதுவாக பலவீனமடைந்தன.

தொடர்ச்சி: பக்கம் 10

# அரசிடம் விலை போன பாராளுமன்ற உறுப்பினரும்!

# ஆபத்தை உணராத மட்டக்களப்பு பண்ணையாளர்களும்!



மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் தங்களுக்கான மேய்ச்சல் தரை நிலங்களை கோரி பல வருடங்களாகப் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

மறுபுறம் மட்டக்களப்பு எல்லையில் சிங்கள சட்டவிரோத குடியேற்றவாசிகளை குடியமர்த்த எடுக்கப்படும் முயற்சிகள் தற்போது மகாவலி பி வலய அபிவிருத்தித் திட்டம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் முயற்சிகள் நடைபெற்று வரும் நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களை அரசிடம் கொண்டு போய் அடகு வைக்கும் இரகசிய வேலைத் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்னெடுத்து வருகிறார்.

மட்டக்களப்பு எல்லையை ஊடறுத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் 70 வீத நிலப்பரப்பையும், பொலனறுவை, அம்பாறை மாவட்டத்தின் 30 வீத நிலப்பரப்பையும் இணைத்து மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட பி வலய திட்டம் தற்போது மெல்ல மெல்ல விஸ்வரூபம் எடுக்க தொடங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மகாவலி பி வலய அபிவிருத்தி திட்டம் அதன் ஊடாக மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களுக்கு ஏற்படப்போகும் பிரச்சினைகள், இந்த திட்டத்திற்கு ஆதரவாக இரகசியமாக காய் நகர்த்தும் பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் சில குழுவினர் பற்றி தெளிவாக ஆராய வேண்டி உள்ளது.

அண்மையில் கிபுல் ஓயா மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக 2500 குடும்பங்களை குடியேற்றம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கி உள்ள நிலையில், தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் விவசாய அபிவிருத்தி குடியேற்றம் என்ற பெயரில் சிங்கள மக்களை குடியேற்றி தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்படி கிபுல் ஓயா மகாவலி அபிவிருத்தி திட்டம் ஊடாக முன்னெடுக்கப் பட உள்ளதாக தற்போது வடக்கில் உள்ள மக்கள் போராட்டங்களை நடாத்த தயாராகி வரும் நிலையில். இலங்கை வரலாற்றில் மகாவலி அபிவிருத்தி திட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கு என்று கூறப்பட்டாலும். மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரம், மற்றும் விகிதாசார அடிப்படையிலான விவசாய குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள். வடகிழக்கு தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான சட்ட ரீதியான அனுமதிகளைக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்தின் பி வலய செயற்பாடுகள், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட இருக்கும் ஆபத்துகள் குறித்து சிந்திக்காது மயிலத்தமடு பகுதிக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் சென்று பொங்கல் விழா கொண்டாடும் அளவுக்கு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி அரசுடன் உறவில் இருக்கின்றனர்.

அரசாங்கத்திடம் தங்களது உரிமைகளை கேட்டு போராடி வரும் பண்ணையாளர்கள், தங்களுக்கு ஏற்படப் போகும் ஆபத்தை அறியாது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினார். என்பதற்காக தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளை அழைத்து பொங்கல் விழா கொண்டாடி வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுடன் இணைந்து பொங்கல் விழா கொண்டாடி மகிழும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு போராட்டத்தின் வலி வேதனைகள் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் போராட்டம் எதற்கானது அவர்கள் பட்ட வேதனைகள் துன்பங்கள் அவர்களுக்கு தெரியாதா? போராடி தமிழர்களின் நிலங்களை பாதுகாக்க வேண்டிய நீங்கள் பொங்கல் விழா கொண்டாடி அரசுடன் உறவு கொண்டாடுவதா?

கிபுல் ஓயா சிங்கள வீட்டு திட்டம் முதல் மட்டக்களப்பு மயிலத்தமடு சிங்கள விவசாய குடியேற்ற திட்டம் வரை அனைத்துமே மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதை யாராலும் தடுக்க முடியாமல் போகலாம்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைக் கிராமமான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை நிலங்களை அரசாங்கம் மிகவும் திட்டமிட்ட வகையில் மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் விவசாய அபிவிருத்திக் கான பகுதிகளாக அடையாளப்படுத்தி அதற்கான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

சுமார் கிட்டத்தட்ட 25000 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட மயிலத்தமடு மாதவனை காட்டுப் பிரதேசத்தில் வெறுமனே 3000 ஏக்கர் பரப்பளவிலான காணிகளை மட்டும் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கீடு செய்து விட்டு மீதி உள்ள காணிகளை அரசாங்கம் என்ன செய்ய போகிறது என்ற கேள்வி எழுகிறது?

மயிலத்தமடு மாதவனை மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரத்திற்குள் இருக்கும் வரை அது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சொந்தமான காணிகள் என யாரும் உரிமை கொண்டாட முடியாது.

அந்த வகையில் மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களுக்கு மூவாயிரம் ஏக்கர் காணிகளை வழங்கும் மகாவலி அபிவிருத்தி திணைக்களம், மீதம் உள்ள காணிகளை விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதாவது பொலநறுவை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை ஒன்றிணைத்து விவசாய குடியேற்ற திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட அபிவிருத்தித் திட்டங்களை தற்போது மேற்கொண்டு வருகிறது.

மயிலத்தமடு மாதவனை பகுதிகளில் தற்போது மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக, வீதிகள், குளங்கள், கால்வாய்கள் புதிதாக அமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன். மயிலத்தமடு மாதவனை பகுதிகளை பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களுடன் இணைக்கும் வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

இந் நிலையில் மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்படி அபிவிருத்தி திட்டங்களுக்கு தடையாக மேய்ச்சல் தரை நில பிரச்சினை காணப்படுவதால் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை அபகரிக்கப்படப் போகிறது என்பதை மறைத்து அதனை வெறுமனே மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை பிரச்சினை என்ற வட்டத்துக்குள் அடையாளப்படுத்தி அவர்களுக்கான பிரச்சினைக்கு வெறும் மூவாயிரம் ஏக்கர் நிலங்களை வழங்கி தீர்வு காண பலர் முயற்சித்து வருகின்றனர். ஆனால் மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் விவசாய குடியேற்ற திட்டம் ஒன்றின் ஊடாக மயிலத்தமடு மாதவனை பகுதிகளில் உள்ள காணிகள் எதிர்காலத்தில் பகிர்ந்தளிக்கப்படப் போகிறது.

அப்போது அந்த பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் குடியேற்ற வாசிகளுக்கும், மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் ஏற்படும் என்பதோடு நீதிமன்றம் ஊடாக மாடுகளை அடைத்து வளர்க்கும் பண்ணை முறையை நடைமுறைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்படலாம்? அதன் பின்னர் மயிலத்தமடு மாதவனை தமிழ் பண்ணையாளர்கள் மெல்ல மெல்ல நாட்டு இன மாடுகளை வளர்ப்பதை கைவிட்டு, பண்ணை மாடுகளை வளர்க்கு திட்டத்திற்கு உள் வாங்கப்படுவார்கள்.

இதற்காக இந்தியா , பாகிஸ்தான் பகுதிகளில் இருந்து மாடுகளை கொண்டு வந்து இலவசமாக கொடுப்பதற்கும், பண்ணையாளர்களிடம் இருந்து பால் கொள்வனவு செய்வது குறித்தும் ஏற்கனவே இந்திய நிறுவனம் ஒன்றுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று நிறைவடைந்துள்ளன.

கடந்த அரசாங்கத்தில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா ஜெயம்பத் ஊடாக நடை முறைப்படுத்தப்பட இருந்த திட்டத்தை தற்போதைய அரசு, எமது பாராளுமன்ற உறுப்பினர் சிலரின் ஊடாக முன்னெடுப்பதற்கு தயாராகி வருகிறது.

மிக முக்கியமாக மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களை கையாளும் சட்டத்தரணி ஒருவரும், பண்ணையாளர்களுடன் மிக நெருக்கமாக இருக்கும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இந்த திட்டத்தின் பின்னணியில் உள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசுடன் மிக நெருக்கமாக செயற்படும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இந்திய நிறுவனம், தேசிய மக்கள் சக்தியின் கால்நடை விவசாய அமைச்சின் இணைப்பாளராக நியமிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி, மற்றும் ஒரு சட்டத்தரணியும், அவருடன் சேர்ந்து மேய்ச்சல் தரை பிரச்சினையில் ஈடுபட்டுவரும் நிறுவனம் ஒன்றும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து எதுவுமே அறியாத மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் அவர்களுடன் பொங்கல் விழா நடாத்தி மகிழ்ச்சியை கொண்டாடி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட எல்லைகளை மட்டும் அல்ல வடகிழக்கில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளை அபகரிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன தொடங்கி மகிந்த ராஜபக்ச , தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க வரை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரிப்பதற்கு சட்ட ரீதியான திணைக்களமாக மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதற்கான சிறந்த உதாரணமாக கிபுல் ஓயா மகாவலி அபிவிருத்தி திட்டம், மட்டக்களப்பு மயிலத்தமடு மகாவலி அபிவிருத்தி திட்டம் மிகச் சிறந்த உதாரணமாகும்.

சலுகைகளுக்காக அரசாங்கத்திடம் அடிமையாகிப் போகும் நமது மக்கள் பிரதிநிதிகள் இருக்கும் வரை ஆயிரக்கணக்கான மாவீரர்களின் ,இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் உயிர் தியாகங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட தமிழர்களின் நிலங்களை பாதுகாக்க முடியாத நிலை உருவாகி உள்ளது.

• • •

# குரலற்றோர் குரலாய் ஒலித்த ஒரு மனித நேயத்தின் குரல் அமைதியாகிப் போனது...!




வவுனியாவில் காணாமல் ஆக்கப் பட்டோர் சங்கத்தினரால் 27-1-.2026 அன்று மேற் கொள்ளப்பட்ட சுழற்சி முறை போராட்டமும் இரங்கல் நிகழ்வும்....

அன்றைய நாள் வவுனியா தபால் கந்தோருக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட தகரக் கொட்டகையில்... மூவாயிரத்து இருநூற்று அறுபத்து மூன்று நாட்கள் கடந்த சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்ட நிகழ்வு நடந்தேறியது.

அன்றைய நிகழ்வில் தம்பித்துரை முத்துக் குமாரசாமி என்று அழைக்கப்படும் T.குமார் எனும் உன்னத மனிதரின் இரங்கல் நிகழ்வும் நடத்தப்பட்டது.

குறிப்பிட்ட ஒரிரு ஊடகவியலாளர்கள் அதனைப் பதிவு செய்து கொண்டு இருந்தார்கள். அந்த குழுவின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா தனது கருத்தை பின்வருமாறு பதிவு செய்தார்.



'நாங்கள் இதே இடத்தில் இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு இரண்டாம் மாதம் இருபத்தி நான்காம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்காகக் கொட்டகை அமைத்து இன்று வரை நீதி கேட்டு போராடி வருகின்றோம்.

எங்கள் அநீதிக்கு எதிரான எங்கள் குரல் என்றோ ஒரு நாள் சர்வதேசத்தின் மனக் கதவுகளைத் தட்டும். அப்போது எங்களுக்கான நீதி கிடைக்கும் என்று இன்று வரை நம்பிக்கை உடன் காத்திருக்கிறோம் .

இந்தப் போராட்டம் பல வழிகளில் எங்களை வலுவிழக்கச் செய்திருக்கிறது. நான் பல தடவை புலனாய்வு பிரிவினரால் விசாரணை என்ற பெயரில் அழைக்கப் பட்டு மன உளைச்சலுக்கு ஆளானேன். ஆனாலும் எங்கள் பிள்ளைகளுக்கு நீதி கிடைக்க எங்களை விட யாரால் இறுதி வரை போராட முடியும்?

ஒரு இழப்பின் வலி என்பது வார்த்தைகளால் முழுமையாக உணர வைக்க முடியாதது. இத்தனை வருடங்கள் கடந்தும் காணாமல் ஆக்கப் பட்ட ஒருவருக்கேனும் இற்றை வரை நீதி கிடைக்க வில்லை. என்று அந்த சங்கத்தின் தலைவி அனைவரின் சார்பிலும் தனது கருத்தை வேதனையோடு முன் வைத்தார்.

அடுத்ததாக அச் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் வழங்கிய ஊடகங்களுக்கான செவ்வியில்...

முத்துகT.தம்பித்துரை முத்துக் குமாரசாமி என்னும் தமிழ் இனத்தின்பால் நேசம் கொண்ட மனிதர் எமக்கு கிடைத்தது வரம் என்று தான் சொல்ல வேண்டும்.

1948க்குப் பின்னரான தமிழ் அரசியல் தலைமைகளின் இரண்டாம் தலைமுறையின் ஆளுமை மிக்க ஒரு பேரறிவாளராக அவர் இருந்தார். தமிழருக்கு நடந்தேறிய சகல விதமான கொடுமைகளுக்கும் குரலற்றோருக்கு குரலாய் அவர் செயற்பட்டார். அமேரிக்க காங்கிரஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தொடங்கி சர்வதேச மனித உரிமை

தொப்பாக்கம் :- **தாயகம் கலாபாரதீ**

மன்றங்கள் வரை சென்று தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை உலகிற்கு வெளிக்காட்டினார்.

அவர் பல்துறைகளில் நிபுணத்துவம் பெற்றதோடு ஒரு சட்ட வல்லுநராகவும் இருந்தார். அவரது சட்ட அறிவு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காய் ஓங்கி ஒலித்தது.

அதுமட்டுமல்லாமல் அம்னஸ்டி இன்டர்நேஷனல் USAஅமைப்பில்ஆசியமற்றும்பசுபிக்பிராந்தியங்களுக்கான முன்னாள் முக்கிய ஆதரவியல் இயக்குனராக இருபத்தி இரண்டு ஆண்டுகள் கடமை ஆற்றினார்.

அவர் ஆரம்ப காலத்தில் இலங்கையில் இருந்த போது... ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தேழு இனக் கலவரத்தின் போது தமிழர்களைக் காத்து லங்கா ராணி என்ற கப்பலில் அனுப்பி வைத்தார் என்பதையும் இங்கு பதிவு செய்ய வேண்டும்.

அதே போல் எண்பத்தி மூன்று யூலைக் கலவரத்தில் அமேரிக்காவின் பாஸ்டன் நகரில் இருந்த போதிலும்... அகதி முகாமில் பணியாற்றிய தன்னார்வத் தொண்டர்கள் மூலம் பல தமிழர்களை பாதுகாப்பாகத் தாயகத்தை அடைய வழி கோலினார்.

எப்போதும் தமிழ் இனத்தின் மீது நேசமிகு பணியாளனாக இருந்த அவர் இறுதி வரை அந்தப் பணியில் இருந்து விலகவே இல்லை. ஒரு நிழற் பக்கமாக விளப்பரமற்று காணமல் ஆக்கப்பட்டோருக்கு செய்த உதவிகளை பட்டியல் இட முடியாது. அந்த உயரிய ஆத்மாவுக்கு இன்றைய நாள் இவ் இடத்தில் இரங்கல் நிகழ்வை செய்வது எமக்கு ஆத்ம திருப்தியைத் தருகிறது என்று செயலாளர் ராஜ்குமார் அவர்கள் கூறினார்.




நீண்ட வரலாற்றைக் கொண்ட எங்கள் தமிழ் இனம் இற்றை வரை இனவழிப்பாலும், காணமல் ஆக்கப்பட்ட நிகழ்வாலும் மட்டும் அல்லாமல் பல ஒடுக்குமுறைகளாலும் துன்பங்களை அடுக்கடுக்காய் அனுபவித்துக் கொண்டே இருக்கிறது என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களினது பெரும் துயர் நிறைந்த மனப் பக்கங்களாகவே இருக்கிறது. நீதி கிடைக்குமா என்ற கேள்விக்கு அப்பால்... சதா நீதிக்காகப் போராடும் இனமாகவே நாம் மாற்றப்பட்டு இருக்கிறோம். இந்த வலிகளைக் காலம் மாற்றலாம் என்பது பலவீனப் பட்டவர்களின் குரலாகவே இன்று வலுவிழந்து போய்க் கொண்டு இருப்பதும் நிதர்சனமே.

• • •

## ஆளுமையும் செயற் ... தொடர்ச்சி...

**கேள்வி :**

**தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் குறித்து உங்கள் பார்வை என்ன?**

**பதில் :**

தமிழரசுக் கட்சி தனது தமிழ் தேசிய அடையாளத்தை மீட்டெடுக்காவிட்டால், அது முழுமையாக கொழும்பு மையஅரசியலாக மாறும் அபாயம் உள்ளது.

அப்படி நடந்தால், தமிழ் தேசிய அரசியல் மேலும் பலவீனமடையும். கட்சிக்குள் உண்மையான ஜனநாயகம் உருவாக வேண்டும். வடக்கு-கிழக்கு மைய அரசியல் மீண்டும் வலுப்பெற வேண்டும்.

தமிழ் தேசிய அடையாளம் மீண்டும் மையமாக்கப் பட வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே தமிழரசுக் கட்சி மீண்டும் தமிழ் அரசியலில் முக்கிய சக்தியாக மாற முடியும்.

## ஈழத்தமிழரின் இறைமை ... தொடர்ச்சி...

வயதுக்கு மேற்பட்ட எல்லாருக்கும் வாக்குரிமை மூலம் தெரிவாகிய பொழுது சட்டவாக்க சபை அரசசபையாக பொறுப்பாட்சியையும் சிலனிஸ_க்கு வழங்கிய பொழுது 61 உறுப்பினர்களில் தொகுதிவாரியாக 50 பேரும் அரசச் செயலாளர் நிதிச் செயலாளர் சட்டச்செயலாளர் மூவரும் அரசால் நியமிக்கப்படும் 8 பேருமாக அமைந்து ஈழத்தமிழர்கள் சிறுபான்மையினராகவும் சிங்களவர்கள் பெரும்பான்மையினராகவும் மாறியதும் அல்லாமல் சிங்களவர்களை மட்டுமே கொண்ட அமைச்சரவையும் முதன்முதல் கட்டமைவானது.

அடுத்து 1948 இல் சோல்பரி அரசியலமைப்பால் 115 ஆண்டு கால பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்னர் தாங்கள் உருவாக்கிய சிலோன் என்னும் நாட்டுக்குத் தொடர்ந்தும் இறைமையின் மீயுயர் இறைமையாளராக சோல்பரி அரசியலமைப்பின் 29(2) விதியின் மூலமும் அரசின் தலைவியாக அதே சோல்பரி அரசியலமைப்பின் மூலமும் மாண்பமை 2வது எலிசபேத் மகாராணி அவர்களே தொடர்ந்த நிலையில் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறையை உள்ளடக்கிய பாராளுமன்றம் என்னும் கீழ்ச்சபையை 18 வயதடைந்த சிலனிஸ் மக்கள் வாக்கு மூலம் தெரிவு செய்யக் கூடிய முறையிலும், செனட் எனப்படும் மேல்சபைக்கான உறுப்பினர்களை மகாராணியின் தேசாதிபதி நியமிக்கக் கூடிய முறையிலும் சுதந்திரத்தை 04.02. 1948 இல் வழங்கினர்.

இதன் மூலம் பிரித்தானியர் தங்களிடம் 152 ஆண்டுகளாக இருந்த ஈழத்தமிழரின் இறைமையை ஈழத்தமிழரிடம் மீளவும் கையளிக்காது சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் சிலோன் என்ற நாட்டினுள் உள்ளடக்கியதால் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சி உருவாக்கிய ஈழத்தமிழர் மேலான சிங்கள பெளத்த நவகாலனித்துவ ஆட்சியாக உலக வரலாற்றில் இவ்வாட்சி ஆரம்பமாகியது.

ஆனால் ஈழத்தமிழர்களில் இது தோற்றுவித்த சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமை ஈழத்தமிழர்களுக்கான சிங்களப் பாராளுமன்றக் கொடுங்கோன்மையாகி இன்று வரை 78 ஆண்டுகள் சிங்கள பெளத்த பேரினவாதத்தையே முன்னெடுக்கும் சிங்கள ஆட்சியார்கள் ஈழத்தமிழின அழிப்பையும் ஈழத் தமிழினத்துடைப்பையும் பண்பாட்டு இனஅழிப்பையும் நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்குமான தேசிய பாதுகாப்பு நடவடிக்கை என நியாயப்படுத்தச் செய்கிறது.

இந்நிலையில் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினை இன்று மட்டும் தொடர்வதால் தான் 2023 இல் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணப் பாராளுமன்றப் பிரதிநிதியுமான கஜேந்திரக்குமார் பொன்னம்பலம் அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர்கள் தங்கள் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அதனைப் பிரயோகித்து தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய அரசையும் வளர்ச்சிகளையும் உருவாக்கும் வரை ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழருக்கான சிறப்புப் பிரதிநிதியை நியமித்து அவர்களது நாளாந்த வாழ்வையும் உடைமைகளையும் உயிரையும் பாதுகாக்க வேண்டுமெனக் கோரினார்.

இவ்வாண்டும் ஈழத்தமிழர்கள் ஒருங்கிணைப்புக் குழுக்களாக உலகெங்கும் 04.02. 2026 இல் தன்னாட்சிக்கான தங்கள் குரல்களைப் பலமாக எழுப்பிப் போராட்டத்தைத் தொடர்கின்றனர். இந்தக் கோரிக்கைகள் உலக மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு பிரித்தானியா இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய முறைமை குறித்த மக்கள் தீர்ப்பாயமொன்றை அமைத்து எவ்வாறு பிரித்தானியா ஈழத் தமிழர்களின் இறைமைக்கு எதிராகச் செயற்பட்டது என்ற உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டிய தேவை உள்ளது என்பதே இவ்வாய்வின் கருத்தாக அமைகிறது.

• • •

# மலையகத்தின் பெயரிடல் அரசியல்:

# வரலாற்றுப் பின்னணியில் சமூகத் தாக்கம்

மருதன் ராம்

இலங்கையின் மலையகச் சமூகம் இருநூறு ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. இந்த வரலாற்றில் 'தொண்டமான்' என்ற பெயர் அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் பிரிக்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. சௌமியமூர்த்தி தொண்டமான் முதல் தற்போதைய ஜீவன் தொண்டமான் வரை ஒரு குடும்பத்தின் ஆதிக்கம் மலையகப் பிராந்தியத்தில் நீடித்து வருகிறது.




இதன் ஒரு வெளிப்பாடாகவே மலையகத்தில் உள்ள பல அரச நிறுவனங்கள், கலாசார நிலையங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்குத் தொண்டமானின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த பல அரசாங்கங்களில் அங்கம் வகித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான அரச நிறுவனங்களுக்கு தொண்டமானின் பெயரை வைத்துள்ளது. இந்நிலையில் அண்மையில் பதவியேற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் சிலர், குறித்த பெயர்களை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தமை பெரும் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைக்கப்பட்டபின் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளில், மலையக பிரதிநிதித்துவம் மற்றும் அரச சொத்துக்கள் தொடர்பான விவாதத்தின் போது இந்த பெயர் மாற்ற விவகாரம் பேசப்பட்டு வந்தது. இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினர்கள் குறிப்பாக மலையகப் பகுதியைச் சேர்ந்த கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துக்கள் முக்கிய பேசுபொருளாக மாறி உள்ளன.



இதன்படி அரச நிறுவனங்கள் என்பது பொதுமக்களின் வரிப்பணத்தில் இயங்குபவை. அவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட அரசியல் குடும்பத்தின் பெயரைச் சூட்டுவது, அந்த நிறுவனத்தை ஒரு தனியார் சொத்தாக மக்கள் மத்தியில் சித்தரிக்கிறது. இது ஜனநாயக பண்புகளுக்கு எதிரானது. என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தனர்.

அத்துடன் மலையகப் போராட்ட வரலாற்றில் சௌமியமூர்த்தி தொண்டமானைத் தவிர கே. நடேசையர், சி.வி. வேலுப்பிள்ளை போன்ற பல தியாகிகள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன என்பதையும் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர். 76 ஆண்டுகால பாரம்பரிய அரசியலில் இருந்து நாட்டை விடுவிக்க வேண்டும் என்பதே மக்களின் ஆணை. எனவே, பழைய அரசியல் "பிரபுத்துவ" அடையாளங்களை நீக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் மலையக மக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த வலியுறுத்தலுக்கு மலையகத்தின் முக்கிய அரசியல் கட்சியும் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தமது முழுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

பாராளுமன்றத்துக்கு வெளியே கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டதுடன் பல இடங்களில் பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களின் ஊடாக போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜீவன் தொண்டமான், "இன்று எங்களை விமர்சிக்கும் பலர் பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்பதற்குக் காரணமே சௌமியமூர்த்தி தொண்டமான் பெற்றுக்கொடுத்த பிரஜாவுரிமைதான்" என சுட்டிக்காட்டினார்.



அத்துடன் தென்னிலங்கையில் பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன, காமினி திசாநாயக்க ஆகியோரின் பெயர்களில் உள்ள நிறுவனங்களை மாற்றாதவர்கள், ஏன் மலையகத் தலைவரின் பெயரை மட்டும் குறிவைக்கிறார்கள் என்ற கேள்வியை அவர் எழுப்பினர். இது வெறும் பெயர் மாற்றம் அல்ல, மலையக மக்களின் வரலாற்றுத் தடம் மற்றும் அடையாளத்தை அழிக்கும் முயற்சி என ஆளும் தரப்பை ஜீவன் தொண்டமான் விமர்சித்தார். இந்த அடிப்படையில் முக்கிய பேசு பொருளாக மாறி உள்ள தொண்டமான் பெயரில் உள்ள முக்கிய நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதன்படி, மலையகத்தில் தொண்டமானின் பெயரில் பல முக்கிய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

அந்த வரிசையில் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் மலையக மக்களின் கலை, கலாசார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனம். இது மலையக மக்களின் கலாசார மற்றும் பண்பாட்டு ரீதியான வளர்ச்சியை நோக்காக கொண்டு உருவாக்கப்பட்டது.

இது அரசாங்கத்தின் நேரடி நிதி ஒதுக்கீட்டில் இயங்கினாலும், இதன் நிர்வாகக் குழுவில் பெரும்பாலும் இ.தொ.கா சார்ந்தவர்களே நியமிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு உள்ளது. அதேபோன்று ஹட்டனில் இயங்கும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம். மலையக இளைஞர்களுக்குத் தொழில்சார் கல்வியை வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இது ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தில் கணினித் துறை, மின்சாரத் துறை மற்றும் தொழிநுட்பக் கல்விக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவும் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் இயங்குகின்ற போதிலும் இதன் பெயரைக் காரணம் காட்டி, குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சி தனது அரசியல் தேவைகளுக்கு மாணவர்களையும் வளங்களையும் பயன்படுத்துவதாக மாற்றுக் கட்சிகள் விமர்சிக்கின்றன.

அதேநேரம் பல தோட்டங்களில் தொண்டமான் கலாசார மத்திய நிலையங்கள் இயங்குகின்றன. தோட்டப்புறங்களில் சிறுவர் கல்வி மற்றும் கலை நிகழ்வுகளுக்காக இவை அமைக்கப்பட்டன. எனினும் பல நிலையங்கள் முறையான பராமரிப்பின்றி உள்ளதாகவும், தேர்தல் காலங்களில் இவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரசாரக் காரியாலயங்களாக மாறுவதாகவும் குற்றச் சாட்டுகள் உள்ளன.



## பெயர் மாற்றும் கோரிக்கையின் பின்னணியிலுள்ள விமர்சனங்கள்

பெயர் மாற்றத்தை ஆதரிப்பவர்கள் சில பிரதான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். ஒரு அரச நிறுவனத்திற்கு ஒருவரின் பெயரை வைப்பதன் மூலம், அந்தச் சமூகம் குறிப்பிட்ட அந்தக் குடும்பத்திற்கு அடிபணிந்திருக்க வேண்டும் என்ற உளவியல் ரீதியான தாக்கம் ஏற்படுத்தப்படுகிறது. நிறுவனத்தின் பெயர் 'தொண்டமான்' என்று இருக்கும்போது, சாதாரண தொழிலாளர்கள் அந்த நிறுவனம் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு சொந்தமானது எனக் கருதி, அரசாங்கத்தின் ஏனைய சலுகைகளை அணுகத் தயங்குகின்றனர்.

மலையகத்தில் புதிய அரசியல் சக்திகள் உருவாகும்போது, பழைய அடையாளங்களை அகற்றுவது அவர்களின் அரசியல் வளர்ச்சிக்குத் தேவையாக இருக்கிறது போன்ற விமர்சனங்களை அவர்கள் முன்வைக்கின்றனர். இந்த விவகாரம் வெறும் பெயர் மாற்றத்துடன் முடிந்துவிடுவதல்ல. இது மலையகத்தின் எதிர்கால அரசியல் திசையைத் தீர்மானிப்பதாகும்.

## பெயரை விடச் சேவையே முக்கியம்

நிறுவனங்களின் பெயரை மாற்றுவதால் மட்டும் மக்களின் வறுமை தீர்ந்துவிடாது. அந்நிறுவனங்கள் எவ்வளவு தூரம் வெளிப்படைத்தன்மையுடன் இயங்குகின்றன என்பதே முக்கியம். நிறுவனங்களின் பெயர்களை மாற்றினாலும், மாற்றாவிட்டாலும் அவை பாரபட்சமின்றி அனைத்து அரசியல் சார்புள்ள மக்களுக்கும் சேவை செய்வதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

மறுபுறம் ஒரு தலைவரின் பிழையான அரசியலை விமர்சிக்கலாம், ஆனால் அவர் செய்த நன்மைகளை வரலாற்றில் இருந்து துடைத்தெறிவது ஒரு சமூகத்தின் வேர்களை அறுப்பதற்குச் சமமாகும். மலையகத்தில் தொண்டமான் பெயரில் உள்ள நிறுவனங்களை மாற்றுவது தொடர்பான விவாதம் என்பது இலங்கையின் அரசியல் மாற்றத்தின் ஒரு அங்கமாகும்.

தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும் "புதிய அரசியல் கலாசாரம்" மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைக்கும் "வரலாற்று அங்கீகாரம்" ஆகியவற்றுக்கு இடையிலான இந்தப் போராட்டம் தொடர்கிறது.பெயர்களில் மாற்றம் கொண்டுவருவதை விட, மலையக மக்களின் அடிப்படைத் தேவையான காணி உரிமை, முறையான கல்வி மற்றும் கௌரவமான வேதனம் அல்லது தேயிலைத் தொழிலில் முறைமை மாற்றம் ஆகியவற்றை உறுதிப் படுத்துவதே அரசாங்கத்தின் முதல் கடமையாக இருக்க வேண்டும். அரசியல் தலைவர்களின் பெயர்கள் வரலாற்றில் இருக்க வேண்டுமா அல்லது கட்டடங்களில் இருக்க வேண்டுமா என்பதை காலமும் மக்களுமே தீர்மானிக்க வேண்டும்.

• • •

# முன்னைய ஒழுங்கு திரும்பப் போவதில்லை

# ஏக்கம் ஒரு உத்தி அல்ல



## இறுதிப் பகுதி

மொழியாக்கம்: **ஆர்தீகன்**

இந்த மாதம் கடந்த 20 நாள் சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தில் கனேடிய பிரதமர் மார்க் கார்னி ஆற்றிய முக்கிய உரை உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவரின் உரையில் தமிழ் வடிவம் வருமாறு:



எங்கள் புதிய அணுகுமுறை அலெக்சாண்டர் ஸ்டப் "மதிப்புகளை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த வாதம்" என்று அழைத்ததை அடிப்படையாகக் கொண்டது - அல்லது, வேறு விதமாகச் சொன்னால், நாங்கள் கொள்கை ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் இருக்க முயற்சிக்கிறோம்.

இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு, ஐ.நா. சாசனத்திற்கு இணங்கும்போது தவிர, பலத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்தல், மனித உரிமைகளுக்கான மரியாதை போன்றவற்றை அடிப்படை மதிப்புகளுக்கான எங்கள் உறுதிப்பாட்டில் கொள்கை ரீதியாக கொண்டுள்ளோம்.

முன்னேற்றம் பெரும்பாலும் அதிகரித்து வருகிறது, நலன்கள் வேறுபடுகின்றன, ஒவ்வொரு கூட்டாளியும் எங்கள் மதிப்புகளைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்பதை அங்கீகரிப்பதில் நடைமுறை ரீதியாக.நாங்கள் பரந்த அளவில், மூலோபாய ரீதியாக, திறந்த கண்களுடன் ஈடுபடுகிறோம். நாம் விரும்பும் உலகத்திற்காக காத்திருக்காமல், உலகத்தை அப்படியே எடுத்துக்கொள்கிறோம்.



கனடா எங்கள் உறவுகளை அளவீடு செய்கிறது, இதனால் அவற்றின் ஆழம் எங்கள் மதிப்புகளை பிரதிபலிக்கிறது. உலக ஒழுங்கின் திரவத்தன்மை, அது ஏற்படுத்தும் அபாயங்கள் மற்றும் அடுத்து வருவதற்கான ஆபத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எங்கள் செல்வாக்கை அதிகரிக்க பரந்த ஈடுபாட்டை நாங்கள் முன்னுரிமைப்படுத்துகிறோம்.

இனி எங்கள் மதிப்புகளின் வலிமையை மட்டும் நாங்கள் நம்பவில்லை, ஆனால் எங்கள் வலிமையின் மதிப்பையும் நம்பியுள்ளோம். நாங்கள் அந்த வலிமையை உள்நாட்டில் கட்டமைக்கிறோம்.

எனது அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து, வருமானங்கள், மூலதன ஆதாயங்கள் மற்றும் வணிக முதலீடுகள் மீதான வரிகளைக் குறைத்துள்ளோம், மாகாணங்களுக்கு இடையேயான வர்த்தகத்திற்கான அனைத்து கூட்டாட்சி தடைகளையும் நீக்கியுள்ளோம், மேலும் எரிசக்தி, AI, முக்கியமான கனிமங்கள், புதிய வர்த்தக வழித்தடங்கள் மற்றும் அதற்கு அப்பால் ஒரு டிரில்லியன் டாலர் முதலீட்டை விரைவாகக் கண்காணித்து வருகிறோம்.




2030 ஆம் ஆண்டுக்குள் எங்கள் பாதுகாப்பு செலவினங்களை இரட்டிப்பாக்கி வருகிறோம், மேலும் எங்கள் உள்நாட்டு தொழில்களை உருவாக்கும் வழிகளில் அவ்வாறு செய்கிறோம்.

வெளிநாடுகளில் நாங்கள் விரைவாக பன்முகப்படுத்துகிறோம். ஐரோப்பாவின் பாதுகாப்பு கொள்முதல் ஏற்பாடுகளான SAFE இல் இணைவது உட்பட ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையை நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம்.

கடந்த ஆறு மாதங்களில் நான்கு கண்டங்களில் பன்னிரண்டு பிற வர்த்தக மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம்.

கடந்த சில நாட்களில், சீனா மற்றும் கத்தாருடன் புதிய மூலோபாய கூட்டாண்மைகளை நாங்கள் முடித்துள்ளோம்.

நாங்கள் இந்தியா, ஆசியான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மெக்சிக்கோ ஆகியவற்றுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதற்காக, மதிப்புகள் மற்றும் நலன்களின் அடிப்படையில் வெவ்வேறு பிரச்சினைகளுக்கான மாறுபட்ட கூட்டணிகளை நாங்கள் பின்பற்றுகிறோம்.

உக்ரைனைப் பொறுத்தவரை, நாங்கள் விருப்பக் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்களாகவும், அதன் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய தனிநபர் பங்களிப்பாளர்களில் ஒருவராகவும் இருக்கிறோம்.

ஆர்க்டிக் இறையாண்மையைப் பொறுத்தவரை, நாங்கள் கிரீன்லாந்து மற்றும் டென்மார்க்குடன் உறுதியாக நிற்கிறோம், மேலும் கிரீன்லாந்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அவர்களின் தனித்துவமான உரிமையை முழுமையாக ஆதரிக்கிறோம். நேட்டோவின் பிரிவு 5க்கான எங்கள் உறுதிப்பாடு அசைக்க முடியாதது.

நாங்கள் எங்கள் நேட்டோ கூட்டாளிகளுடன் (நோர்டிக் பால்டிக் உட்பட) இணைந்து கூட்டணியின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை மேலும் வலுவாகப் பாதுகாக்கிறோம், இதில் கனடாவின் ஓவர்-தி-ஹைரிசான் ரேடார், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் மற்றும் தரையில் தரைப்படை ஆகியவற்றில் முதலீடு செய்வதும் அடங்கும். கிரீன்லாந்து மீதான வரிகளை கனடா எதிர்க்கிறது மற்றும் ஆர்க்டிக்கின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட நோக்கங்களை அடைய கவனம் செலுத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுக்கிறது.

பன்முக வர்த்தகத்தைப் பொறுத்தவரை, டிரான்ஸ்-பசிபிக் கூட்டாண்மைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் ஒரு பாலத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம், இது 1.5 பில்லியன் மக்களைக் கொண்ட ஒரு புதிய வர்த்தகத் தொகுதியை உருவாக்குகிறது.



முக்கியமான கனிமங்களைப் பொறுத்தவரை, G7 இல் வாங்குபவர் கிளப்புகளை நாங்கள் உருவாக்குகிறோம், இதனால் உலகம் செறிவூட்டப்பட்ட விநியோகத்திலிருந்து விலகிச் செல்ல முடியும்.

AI-யில், மேலாதிக்கவாதிகள் மற்றும் ஹைப்பர் ஸ்கேலர்களுக்கு இடையே தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படாமல் இருக்க, ஒத்த எண்ணம் கொண்ட ஜனநாயக நாடுகளுடன் நாங்கள் ஒத்துழைக்கிறோம்.

இது அப்பாவியான பன்முகத்தன்மை அல்ல. குறைக்கப்பட்ட நிறுவனங்களை நம்பியிருப்பதும் அல்ல. ஒன்றாகச் செயல்பட போதுமான பொதுவான தளத்தைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டாளர்களுடன், பிரச்சினைக்கு பிரச்சினையாக செயல்படும் கூட்டணிகளை இது உருவாக்குகிறது. சில சந்தர்ப்பங்களில், இது பெரும்பாலான நாடுகளாக இருக்கும்.

மேலும் இது எதிர்கால சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு நாம் ஈர்க்கக்கூடிய வர்த்தகம், முதலீடு, கலாச்சாரம் உள்ளிட்ட அடர்த்தியான இணைப்புகளின் வலையமைப்பை உருவாக்குகிறது.

தொடர்ச்சி: பக்கம் 15

# மத்திய கிழக்கின் படைவலுச் சமநிலையை மாற்றும் போர்



வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஈரானைச் சுற்றியுள்ள நிலைமை சூடுபிடித்துவருகின்றது. ஈரான் மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலை நடத்த அமெரிக்க திட்டமிட்டுள்ளதாக என IRGC சேனல் தெரிவித்துள்ளது. எந்தவொரு தாக்குதலையும் முழு அளவிலான போராகக் கருதுவதாக ஈரான் பதி லளித்துள்ளது. அமெரிக்க தாக்குதலில் இஸ்ரேல் பங்கேற்காது என்றும் எனவே இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தவேண்டாம் என்று ஈரான் கேட்டுக் கொள்ளப்பட்டபோதும்இஸ்ரேல் இலக்காக மாறும் என்று தெஹ்ரான் பதிலளித்ததுள்ளது என சவுதி அரேபியஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.




மேலும், பாகு முதல் ரியாத் வரையிலான பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் ஈரான் எச்சரிக்கைகளை அனுப்பியுள்ளது. அவர்களின் பிர தேசத்திலிருந்து அல்லது அவர்களின் வான்வெளி வழியாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு தாக்குதலும் இந்த நாடுகளின் தாக்குதலாகக் கருதப்படும் ஈரான் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் அமெரிக்க திட்டமிட்ட இரவுத் தாக்குதல் ரத்து செய்யப்பட்டதற்கு இதுவே முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.



அதேசமயம், முதல் முறையாக கடற்படைக்குச் சொந்தமான நிலத்தடி ஏவுகணை தளங்களின் காட்சி களை ஈரான் காட்டியுள்ளது. இந்த வாரம் அது நேரடி துப்பாக்கிச் சண்டை பயிற்சிகளுக்காக ஜாஸ்க் கடற் படைத் தளத்தை மூடுவதாகவும் அறிவித்துள்ளது. இது பாரசீக வளைகுடாவிற்கு உள்ளேயும் வெளியேயுமான தயாரிப்புகளைக் குறிக்கிறது.

இந்த பயிற்சிகளை தொடர்ந்து அமெரிக்கா தனது தாக்குதல் உத்திகளை மறுசீரமைத்துள்ளது. அதன் அடிப்படையில், ஈரானிய ஏவுகணை ஏவுதளம்,சேமிப்பு அல்லது ரேடார் தளங்கள், ட்ரோன்கள் ஆலை என்பன முதலில் F-35,FA-18 மற்றும் டோமாஹாக் க்ரூஸ் ஏவு கணைகள் மூலம் அகற்றப்படும், பின்னர் மீதமுள்ளவை AE-GIS போர் அமைப்புகள் SM-3, SM-6 இடைமறிப்பான்களால் அழிக்கப்படும் என சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம், ரஷ்ய உதவியுடன் தெஹ்ரான் ஒரு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதித் திருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈரானில் இருந்து780கிலோமீட்டர்தொலைவில்உள்ளவிமானம்தாங்கி கப்பலான யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கனை சுற்றிஅமெரிக்க போர்க்கப்பல்கள் நிற்கின்றன. அந்த குழுவில் F/A-18 சூப்பர் ஹார்னெட் மற்றும் F-35C லைட்னிங் II போர் விமானங்கள் உட்பட எட்டு படைப்பிரிவு விமானங்கள்உள்ளன. இந்த விமானங்களின் மொத்த எண்ணிக்கை 48. பிராந்தியத் தில் உள்ள அமெரிக்க அழிப்பாளர்களின் (Destroyers) எண்ணிக்கை 8, ஒவ்வொன்றும் 96 பல்நோக்கு ஏவுகணைக ளைக் கொண்டுள்ளன.



ஈரானை தாக்க அமெரிக்கா தயாராக உள்ள அதேசமயம் ஈரானிய தாக்குதல்களிலிருந்து தமது தளங்கள் மற்றும் கப்பல்களைப் பாதுகாக்க அமெரிக்கா மத்திய கிழக்கில் உள்ள தளங்களில் பேட்ரியாட் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் THAAD ஏவுகணைகளை நிலைநிறுத்தியுள்ளது என எகனாமிஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க கப்பல்களின் “அழகான ஆர்மடா” ஈரானுக்கு அனுப்பப்படுவதாகவும், அதே நேரத்தில் தெஹ்ரான் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ளும் என்ற நம்பிக்கைஉள்ளதாகவும் ட்றம்ப் தெரிவித்துள்ளார். அதாவது முற்றுகை அல்லது போர் தோல்வியுறும் சமயத்தில் அமெரிக்கா ஒரு உடன்பாட்டுக்கு செல்லவும் தயாராகவே உள்ளது என்தையே இது காட்டுகின்றது. ஆனால் இஸ்ரேலுடன் ஒரு தீர்க்கமான போருக்கு நாடு தயாராகி வருவதாகஈரானின் உச்ச தலைவரின் மூத்த இராணுவ ஆலோசகர்தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக அமெரிக்க தூதர் ஸ்டீவ் விக்காஃப் உடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை, நாங்கள் பேச்சுவார்த்தைகளை கோரவில்லை. அச்சுறுத்தல்கள் நிறைந்த சூழலில் பேச்சுவார்த்தைகள் பற்றி பேசுவது சாத்தியமற்றது, பேச்சுவார்த்தைகளுக்கு விதிகள் உள்ளன, அவை சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதை அடிப்படையில் இருக்க வேண்டும் என ஈரானின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.



ஜனவரி 14 ஆம் தேதி அமெரிக்கா ரகசியமாக ஈரானை தாக்க முடிவெடுத்திருந்தது ஆனால் ஈரான் அதனை நட்பு நாடுகளின் புலனாய்வு அமைப்புக்கள் மூலம் அறிந்துவிட்டது. அதனை அறிந்த அமெரிக்க அதிகாரிகள் திட்டங்கள் தெளிவாக இல்லைஎன்று அந்த தாக்குதலை நிறுத்தியிருந்தனர் என்று மூத்த இஸ் ரேலிய தூதர் தெரிவித்துள்ளார். ஈரான் அன்றிரவு தனது வான்வெளியை முன்கூட்டியே மூடியது. தெஹ்ரான் தாக்குதல் நடக்கப்போவதை அறிந்திருந்தது. இது 12 நாள் போரிலிருந்தான ஒரு மாற்றம், ஏனெனில் அந்த தாக்குதலை ஈரானை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இந்த முறை, ஈரான் தயாராக இருந்தது.



அச்சுறுத்தலை எதிர்கொள்ள ஈரான் தனது நவீன ஆளில்லாத தாக்குதல் விமானங்களையும், ஏவுகணை களையும் தான் நம்பியுள்ளது. ஈரானைப் பாதுகாக்கும் ட்ரோன் பெல்ட் பலமானது. 2022 மற்றும் 2024 க்கு இடையில், ஈரான் ரஷ்யர்களுக்கு 2,000 முதல் 4,000 ஷாஹெட் ட்ரோன்களை வழங்கியதாகக் கூறப்படுகிறது, “ஈரான் தற்போது தினமும் 400 ஷாஹெட்- ட்ரோன்களை உற்பத்தி செய்து வருவதாகவும், தற்போது போர் பயன்பாட்டிற்கு 80,000 ட்ரோன்களைத் தயாராக வைத்திருக்கிறது மேலும்

தொடர்ச்சி: பக்கம் 15

## சிறிதரன், சுமந்திரனின் ... தொடர்ச்சி...

குற்றச்சாட்டுகளுக்கு அவரிடம் இருந்து இன்னும் முறையான விளக்கங்கள் வெளிவராத நிலையில், கட்சியின் அரசியல் குழு இந்த விவகாரத்தை மிக அவசரமாகக் கையாள்வது பல சந்தேகங்களை எழுப்புகிறது.

குறிப்பாக, சிறிதரனை அரசியல் ரீதியாக பல மிழக்கச் செய்து இறுதியாக கட்சியிலிருந்து வெளியேற்ற அவருடைய பாராளுமன்றப் பதவியை பிடுங்கி எடுப்பதன் மூலம், தேர்தலில் தோல்வியடைந்த சுமந்திரன் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழைய முயற்சிப்பதாக எழும் விமர்சனங்களைத் தவிர்க்க முடியவில்லை.

மறுபுறம், சிறீதரன் விடுதலைப்போராட்டம், தமிழ்த் தேசிய உணர்வு ஆகிய இரு கவசங்களுடன் பயணித்துவரும் ஒருவர். உணர்வெழுச்சியை வாக்குகளாக மாற்றக்கூடிய புலமையில் தான் அவரது அரசியல் பயணம் இன்னமும் சாத்தியமாகி க்கொண்டிருக்கின்றது.

அதற்காக, சிறிதன் 'தமிழ்த் தேசிய தூய அரசியல் வாதி' என்று கொள்வதற்கு இல்லை. 2010ஆம் ஆண்டு கிளிநொச்சி கட்டளைத் தலைமையகத்தில் நடைபெற்ற இராணுவத்தின் முக்கிய கூட்டத்திலிருந்து வெளியேறும் சந்தர்ப்பத்தில் அவருடைய தொடர்புகளும், சந்திப்புக்களும் திரைமறைவில் முன்னெடுக்கின்ற செயற்பாடுகளும் இயற்கை நீதிக்கு எதிரானவை தான்.

அதுமட்டுமன்றி, தற்போதைய குற்றச்சாட்டுக்களின் படி எட்டு சந்தர்ப்பங்களில் அரசுக்கு, இராணுவத்துக்கு ஆதரவாக செயற்படும் வரையில் நடவடிக்கைகள் எடுக்கப் படாது காத்திருந்தமைக்கான காரணம் என்ன?

சிறிதரன் இராணுவத்துக்கு ஆதரவாக செயற் பட்டார் என்று கூறும் சுமந்திரன் இராணுவம் புடைசூழ ஐந்தாண்டுகளாக பயணித்ததையும், பொன்சேகாவை ஆதரிப்பதற்கு எடுத்த தீர்மானத்தில் எவ்வளவு தூரம் செல் வாக்குச் செலுத்தினார் என்பதையும் மறந்து விடலாகாது.

அந்த வகையில் ஒப்பீட்டளவில் சுமந்திரன், சிறி தரன் ஆகிய இருவரும் சரி அவரது அணியினரும் சரி தூய தமிழ்தேசியவாதிகள்' என்று கொள்ள முடியாது.

இராணுவத்துடனும் சரி, தென்னிலங்கையுடனும் சரி திரைமறைவில் இவர்கள் கொண்டிருக்கின்ற உறவு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சாதாரண தமிழ் மக்கள் அறிந்திருக்காது விட்டாலும் குறித்த இருவரின் மனச் சாட்சிக்கே வெளிச்சம்.

ஆனால் சிறிதரனைப் பொறுத்தவரையில், யாழ்ப் பாணத் தேர்தல் மாவட்டத்தில் கட்சி பெற்ற வாக்குகளில் சரிபாதிக்கும்மேலான விருப்பு வாக்குகளைத் தனி ஒருவராகப் பெற்று வருகிறார். ஆதலால் அவர் மக்கள் செல்வாக்கு மிக்க ஒருவராக, காணப்படுகையில் தனிப்பட்ட நோக்கங்களுக்காக அவரை தனிமைப்படுத்துவது கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

சி.வி.கே. சிவஞானம் கட்சியின் பதில் தலைவராகப் இருந்தாலும் கூட தமிழரசுக்கட்சி முழுமையாகச் சுமந்திர னின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. இதனால் உட்கட்சி ஜனநாயகம் என்பது கேள்விக்குறியாகியுள்ளது. ஜனநாயக ரீதியில்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டும், பதவியேற்க முடியாமல் தடுக்கப்பட்ட சிறிதரன், இப்போது பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

திருமலையில் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தை அடுத்து கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் மற்றும் பதில்தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோரின் முரண்பாடான கருத்துக்கள் நேரெதிராக இருக்கின்றன. சிறிதரன் மீதான நடவடிக்கைகளை ஊடகங்களுக்குப் பகிரங்கப்படுத்தியதில் கட்சிக்குள் ளேயே இருவேறு நிலைப்பாடுகள் இருப்பதை அம்பலப் படுத்தியுள்ள நிலையில் தற்போது அதனை வெறுமனே 'உள்வீட்டு விவகாரம்' என்று கூறி மறைக்க முற்படுவது யதார்த்தத்திற்குப் புறம்பானது.

சிறிதரன் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் அவரை கட்சியிலிருந்து வெளியேற்ற முனை யும் முயற்சிகள் வெற்றிபெற்றால், அது வடக்கில் தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியைப் பிளவுபடுத்தி, மாற்றுச் சக்திகளுக்கு வழிவகுத்துவிடும். குறிப்பாக களத்தில் வேகமாகச் செயற்பட்டு வரும் ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தன்னை ஆழமாகவேரூன்றிக் கொள்வதற்கு வழிசமைக்கும்

கட்சியின் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் சுமந்திர னின் வழிகாட்டல்களை ஏற்றுச் செயற்பட்டாலும், கிராம மட்டத்திலானஆதரவாளர்கள் சிறிதரனின் பக்கமே நிற் கிறார்கள் என்பது கடந்த காலத் தேர்தல் முடிவுகளில் தெளி வாகியுள்ளது.

இந்தமுரண்பாடு முற்றி சிறிதரன் கட்சியிலிருந்து வெளியேற நேரிட்டால், அது தமிழ் அரசுக் கட்சிக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்தத்தமிழன அடையாளச் சிதை வுக்கும் ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும்.

சிறிதரன் மீதான ஊழல் மற்றும் சொத்து சேர்க்கை தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதும், அவரை இராணுவமயமாக்கலின் ஆதரவாளராகச் சித்தரிப்பதும் அவரை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்தினாலும், அதுநீண்ட காலநோக்கில் கட்சியின் ஸ்திரத்தன்மையையே கேள்விக்குள்ளாக்கும்.

சுமந்திரனின் சட்டப்புலமையும் சாதுரியமான காய்நகர்த்தல்களும் தற்காலிக வெற்றியைத் தந்தாலும், மக்கள் ஆணைஇல்லாமல் கட்சியை வழிநடத்துவது என்பது நீண்ட காலம் நிலைக்காது. அதுமட்டுமன்றி, சுமந்திரனைச் சூழ்ந்துள்ளவர்களும் வாய்ப்புக்காக காத்திருப்பவர்களே தவிரவும் உண்மையான விசுவாசிகள் அல்லர்.

ஆகவே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது உட்கட்சி முரண்பாடுகளைத் தீர்க்க விவேகமான மற்றும் வெளிப்படையான அணுகுமுறையைக் கையாள வேண் டும்.

சிறிதரன் மீதான விமர்சனங்களை விவாதிப்பதும், சுமந்திரனின் தலைமைத்துவ நகர்வுகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதும் அவசியமானது. என்றாலும், அவை தமிழ்த் தேசிய அரசியலை பலவீனப்படுத்தாத வண்ணம் அமைய வேண்டும். அரசியல் முதிர்ச்சியுடன் இந்தநெருக்கடியைக் கையாளத் தவறினால், தமிழ் அரசுக் கட்சி தனது வரலாற்றுப் பெருமையை இழப்பதோடு, தமிழ் மக்களின்அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பலவீனப்படுத்திவிடும்.

சிறிதரன், சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் மோதல்களின் இறுதிப் பாதிப்பு என்பது குறித்த இரு தனிநபர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் தான் என்பதைத் தமிழரசுக் கட்சிஉணர வேண்டிய தருணம் இதுவாகும். அதனை உணரத் தவறினால் அது தமிழன இருப்புக்கே சாபக்கேடாகிவிடும்.

• • •

## செப்டம்பர் மாதத்திற்குள் ... தொடர்ச்சி...

காட்டியது.

வேமோவின் வாகனங்கள் தற்போது ஒரு பாதுகாப்பு ஓட்டுநரால் இயக்கப்படுகின் றன, தெருக்களை வரைபடமாக்குகின்றன. ஆனால் பணம் செலுத்தும் பயணிகளுக்கு சேவை தொடங்கும்போது, மனிதர்கள் யாரும் அதனை இயக்க மாட்டார்கள்.

வேமோ நிகழ்வில் கலந்து கொண்ட கிரீன்வுட், ஓட்டுநர் இல்லாத வாகனங்கள் நகர சாலைகளை பாதுகாப்பானதாக மாற்றும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

"மனித ஓட்டுநர்களைப் போலல்லாமல், தானி யங்கி வாகனங்கள் சோர்வடையாது, கவனம் சிதறாது, செல்வாக்கின் கீழ் ஓட்டாது என்பதை நாங்கள் அறிவோம்," என்று அவர் கூறினார்.

ஆனால் தானியங்கி வாகனங்கள் இங்கிலாந்து சாலைகளில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு, "ஹேக்கிங் மற்றும் சைபர் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு உட்பட" கடுமையான பாதுகாப்பு தரநிலைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஓட்டுநர் இல்லாத வாகனத் தொழில் 2035 ஆம் ஆண்டுக்குள் இங்கிலாந்து பொருளாதாரத்தில் £42 பில்லியனைச் சேர்க்கலாம் மற்றும் கிட்டத்தட்ட 40,000 புதிய வேலைகளை உருவாக்கலாம் என்று அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

Waymo வாகனம் அதைச் சுற்றியுள்ள உலகத் திலிருந்து தரவைச் சேகரிக்க நான்கு சென்சார் அமைப்புகளைப் பயன்படுத்துகிறது: லிடார், பார்வை, ரேடார் மற்றும் மைக்ரோஃபோன்.

இந்த சென்சார்கள் அதன் வாகனங்கள் அதன் சுற்றுப்புறங்களை 360 டிகிரி தொலைவில், மூன்று கால் பந்து மைதானங்களுக்கு முன்னால் மற்றும் மோசமான வானிலையின் போது அறிந்துகொள்ள உதவுகின்றன என்று அது கூறுகிறது.

## எட்டு ஆண்டுகளுக்குப் ... தொடர்ச்சி...

இங்கிலாந்து பிரதமர் ஒருவரின் கடைசி பயணம் 2018 இல், தெரசா மே பெய்ஜிங்கிற்கு விஜயம் செய்தபோது நடந்தது.

இந்த மாதம் கனேடிய பிரதமர் மார்க் கார்னி பெய்ஜிங்கிற்கு இதேபோன்ற விஜயம் மேற்கொண்டதால் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கோபமடைந்தார். ஸ்டார்மரின் பெய்ஜிங் வருகைக்கு ட்ரம்ப் எவ்வாறு பதிலளிப்பார் என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் சீனாவுடன் "நிலையான" உறவைப் பேணுவது "உறுதியான தேசிய நலனில்" என்று இங்கிலாந்து பிரதமர் கூறினார்.

பயணத்தில் பிரதமருடன் HSBC, பிரிட்டிஷ் ஏர்வேஸ், அஸ்ட்ராஜெனெகா மற்றும் GSK உள்ளிட்ட கிட்டத்தட்ட 50 பிரித்தானியா வணிகங்கள் மற்றும் கலாச் சார அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு குழு உள்ளது. அவர்கள் ஷாங்காயில் சீன மற்றும் பிரித்தானியா வணிகங்களை சந்திக்க உள்ளனர்.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS



## முன்னைய ஒழுங்கு ... தொடர்ச்சி...

நீங்கள் மேசையில் இல்லையென்றால், நீங்கள் மெனுவில் இருக்கின்றீர்கள் எனவே, நடுத்தர சக்திகள் ஒன்றாகச் செயற்பட வேண்டும்.

பெரிய சக்திகள் அதை தனியாகச் செய்ய முடியும். அவர்களிடம் சந்தை அளவு, இராணுவத்திறன், விதிமுறைகளை ஆணையிடும் திறன் உள்ளன. மத்திய சக்திகள் இங்கு இல்லை. ஆனால் நாம் ஒரு மேலாதிக்கவாதியுடன் இருதரப்பு ரீதியாக மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தும்போது, பலவீனத்திலிருந்து பேச்சு வார்த்தை நடத்துகிறோம். வழங்கப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். மிகவு ம் இணக்கமாக இருக்க ஒரு வருக் கொருவர் போட்டியிடுகிறோம்.

இது இறையாண்மை அல்ல. கீழ்ப்படிதலை ஏற்றுக் கொள்ளும் போது இறையாண்மையின் செயல்அற்ற திறன் இது.

வல்லரசுகளுக்கிடையேயான போட்டி நிறைந்த உல கில், நாடுகளுக்கு இடையே ஒரு தேர்வு உள்ளது: நன்மைக்காக ஒருவருக்கொருவர் போட்டியிடுவது அல்லது தாக்கத்தை ஏற்படுத்தும் மூன்றாவது பாதையை உருவாக்க ஒன்றிணைவது.

நாம் ஒன்றாகப் பயன்படுத்தத் தேர்வுசெய்தால், சட்டபூர்வமான, நேர்மை மற்றும் விதிகளின் சக்தி வலுவாக இருக்கும் என்ற உண்மையை நாம் அறியாமல் இருக்க, கடின சக்தியின் எழுச்சியை நாம் அனுமதிக்கக்கூடாது.

இது என்னை மீண்டும் ஹேவலுக்கு அழைத்துச் செல்கிறது. நடுத்தர சக்திகள் "உண்மையில் வாழ்வது" என்றால் என்ன? இதன் பொருள் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வது. "விதிகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கை" அவர்கள் கூறுவதைப்போல அழைப் பதை நிறுத்துங்கள். இந்த அமைப்பை அது என்ன வாக செயற்படுகின்றதோ அவ்வாறே அழைக்கவும்: தீவிரம டைந்து வரும் பெரும் சக்தி போட்டியின் காலம் இது, இங்கு மிகவும் சக்திவாய்ந்தவர்கள் பொருளாதார ஒருங்கி ணைப்பை வற்புறுத்தலின் ஆயுதமாகப் பயன்படுத்தி தங்கள் நலன்களைப் பின்தொடர்கிறார்கள்.

இதன் பொருள் தொடர்ந்து செயல்படுவது. கூட்டாளிகள் மற்றும் போட்டியாளர்களுக்கும் அதே தரங்க ளைப் பயன்படுத்துங்கள். நடுத்தர சக்திகள் ஒரு திசையில் இருந்து பொருளாதார மிரட்டலை விமர்சித்து, அது மற்றொரு திசையில் இருந்து வரும்போது அமைதியாக இருக்கும்போது, நாம் அந்த அடையாளத்தை மறைக்கின் றோம். அதாவது நாம் நம்புவதாகக் கூறுவதை உருவாக்குவது. பழைய ஒழுங்கு மீட்டெடுக்கப்படும் வரை காத்திருப்பதற்குப் பதிலாக, புதிய ஒழுங்கில் செயல்படும் நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தங்களை உருவாக்குங்கள்.

மேலும் அது வற்புறுத்தலை செயல்படுத்தும் அ ந்நியச் செலாவணியைக் குறைப்பதைக் குறிக்கிறது. வலுவான உள்நாட்டுப் பொருளாதாரத்தை உருவாக்குவது -எப்போதும் ஒவ்வொரு அரசாங்கத்தின் முன்னுரிமையாக இருக்க வேண்டும். பல்வகைப்படுத்தல் சர்வதேசம் என்பது வெறும் பொருளாதார விவேகம் மட்டுமல்ல; அது நேர்மையான வெளியுறவுக் கொள்கைக்கான பொருளின் அடித்தளமாகும். பழிவாங்கலுக்கான பாதிப்பைக் குறைப்பதன் மூலம் நாடுகள் கொள்கை ரீதியான நிலைப்பாடுகளுக்கான உரிமையைப் பெறுகின்றன.

கனடா உலகம் விரும்புவதைக் கொண்டுள்ளது. நாங்கள் ஒரு ஆற்றல் உள்ள வல்லரசு. எங்களிடம் முக்கியமான கனிமங்களின் இருப்புக்கள் உள்ளன. உலகிலேயே மிகவும் படித்த மக்கள் தொகை எங்களிடம் உள்ளது. நமது ஓய்வூதிய நிதிகள் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் அதிநவீன முதலீட்டாளர்களில் ஒன்றாகும். மூலதனம், திறமை மற்றும் தீர்க்கமாக செயல்பட மகத்தான நிதி திறன் கொண்ட ஒரு அரசாங்கம் எங்களிடம் உள்ளது.

கனடா ஒரு பன்முக சமூகம். நமது பொது சதுக்கம் சத்தமாகவும், பன்முகத்தன்மையுடனும், சுதந்திரமாகவும் உள்ளது. கனடியர்கள் நிலைத்தன்மைக்கு உறுதியுடன் உள்ளனர்.

நாம் ஒரு நிலையான, நம்பகமான கூட்டாளியாக இருக்கிறோம் - உலகில் அது எதுவாக இருந்தாலும் சரி - நீண்ட காலத்திற்கு உறவுகளை உருவாக்கி மதிக்கும் ஒரு கூட்டாளி.

கனடாவிற்கு வேறு ஒன்றும் உள்ளது: என்ன நடக்கிறது என்பதற்கான அங்கீகாரம் மற்றும் அதற்கேற்ப செயல்படுவதற்கான உறுதிப்பாடு.

இந்த முறிவு, தழுவலை விட அதிகமாக தேவைப்படுகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இது உலகத்தைப் பற்றிய நேர்மையை கோருகிறது.

பழைய ஒழுங்கு திரும்பப் போவதில்லை. அதற்காக நாம் துக்கப்படக்கூடாது. ஏக்கம் ஒரு உத்தி அல்ல.

ஆனால் முறிவிலிருந்து, நாம் சிறந்த, வலுவான மற்றும் நீதியான ஒன்றை உருவாக்க முடியும்.

அது நடுத்தர சக்திகளின் பணி, அவர்கள் கோட்டைகளின் உலகத்திலிருந்து அதிகம் இழக்க நேரிடும், ஆனால் உண்மையான ஒத்துழைப்பு உலகத்திலிருந்து அதிகம் பெறுவார்கள்.

சக்திவாய்ந்தவர்களிடம் அவர்களின் சக்தி இருக்கிறது. ஆனால் நமக்கும் ஒன்று இருக்கிறது - பாசாங்கு செய்வதை நிறுத்துவதற்கும், யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதற்கும், உள்நாட்டில் நமது பலத்தை உருவாக்குவதற்கும், ஒன்றாகச் செயல்படுவதற்கும் உள்ள திறன்.

அது கனடாவின் பாதை. நாங்கள் அதை வெளிப்படையாகவும் நம்பிக்கையுடனும் தேர்வு செய்கிறோம்.

மேலும், அதை எங்களுடன் எடுத்துச் செல்ல விரும்பும் எந்தவொரு நாட்டிற்கும் அது திறந்திருக்கும் பாதையாகும்.

• • •

## மத்திய கிழக்கின் ... தொடர்ச்சி...

உலகில் அதிக ட்ரோன்கள் செயல்பாட்டில் உள்ள நாடாக மாறும் விளிம்பில் உள்ளது எனவும் இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானிய ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு பகுதி அமெரிக்க கடற்படையின் மின்னணு போர் (EW) அமைப் புகளை ஊடுருவிச் செல்லும் திறன் கொண்டதாக இருக்கும் எனவும் நம்பப்படுகின்றது.

அவ்வாறு ஈரான் எதிர்த்து நின்றால் அது அமெரிக்க கடற்படைக்கு உயிரிழப்புகளுடன் கூடியநீண்ட காலத்திற்கு நீடிக்கும் ஒரு போராக மாறக்கூடும். பல நூறு பில்லியன் டொலர்களும் செலவாகும்.

12 நாள் போரின் போது, இஸ்ரேலின் வெய்ஸ்மேன் நிறுவனம், நகேட் வான்படைத்தளம் மற்றும் ஹைஃபா சுத்திகரிப்பு நிலையத்தை துல்லியமாக ஈரான் தாக்கியது, அதே போல் சில இஸ்ரேலிய ஏவுகணை தளங்களையும் தாக்கியது, அனைத்தும் கடுமையான நெரிசல் உள்ள சூழலில் நடத்தப்பட்ட தாக்குதல்.

அதேசமயம், ஈரானிய வான் பாதுகாப்பு ஒருபோதும் முழுமையாக சோதிக்கப்படவில்லை. கடந்த போரில் இஸ்ரேலின் தரை நாசவேலை நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன, ரேடார்களையும் பெரும்பாலான குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்புகளையும் மொசாட் வெற்றிகரமாக முடக்கியது. ஈரான் அதன் நீண்ட மற்றும் நடுத்தரதூர வான் பாதுகாப்புகளை நிரந்தரமாக நிலைநிறுத்தவில்லை, அதன் விளைவாக 12 நாட்கள் போரின் போது அவற்றில் எதுவும் அழிக்கப்படவில்லை.


அமெரிக்க கப்பல்கள் மற்றும் விமானங்களின் உயர் தொழில்நுட்பம் ஈரானிய ஆயுதங்களை முடக்க லாம் என நம்பப்படுகின்றது. வெனிசுலா மீதான நட வடிக்கையில் நிகழ்ந்ததாகக் கூறப்படுவது போல ஈரானின் வான்பாதுகாப்புக்களை அமெரிக்கா முடக்குவது கடினம். ஈரானியர்கள் தங்கள் அமைப்புகளை அணைத்தால் மட்டுமே இது நடக்கும். இதுவரை, ஈரானிய உபகரணங்கள் குறுக்கீட்டிற்கு மிகவும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஷாஹெட் ட்ரோன்கள் தொடர்ந்து துல்லியமாக இயங்குகின்றன, இது அமெரிக்கர்களுக்கு ஒரு பெரிய சவாலாக இருக்கும்.

சுடு வலுவைப் பொறுத்தவரையில் அமெரிக்க கேரியர் ஸ்ட்ரைக் குழு ஈரானிய கடற்படையை எளிதில் நசுக்கும். அவர்கள் ஈரானின் பெரிய கப்பல்களை சில நிமிடங்களில் அழிப்பார்கள், ஆனால் ஈரானிடயம் உள்ள மினி-நீர்மூழ்கிக் கப்பல்கள்,UAV,UUV மற்றும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட வேகமான தாக்குதல் கப்பல்களுக்கு எதிராக அவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும். எனவே தான் ஈரானிய விமானம்தாங்கி கப்பல் ஷாஹித் பாகேரியை அமெரிக்கா மூழ்கடிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.. நிலையான இறக்கை போர் விமானங்களை ஏவி மீட்டெடுக்கும் திறன் கொண்ட பாரம்பரிய விமானம்தாங்கி கப்பல் ஈரானிடம் இல்லை. இருப்பினும், ஈரான் IRIS ஷாஹித் பாகேரி எனப்படும் ட்ரோன் தாங்கி கப்பலை கொண்டுள்ளது. இந்த விமானம் தாங்கி கப்பல் இஸ்லாமிய புரட்சிகர கடற்படை மூலம் இயக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு வணிக கொள்கலன் கப்பலை கொள்வனவு செய்து அதனை மறுசீரமைத்துள்ளது ஈரான். இந்த விமானம்தாங்கி கப்பலில் ஸ்கை-ஜம்ப் சாய்வுதளம் மற்றும் ட்ரோன் தரையிறங்குவதற்கான கைது கியர் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விமான தளம் பொருத்தப்பட்டுள்ளது. இது நிலையான இறக்கை கொண்ட ட்ரோன்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை ஏவி தரையிறக்கும் திறன் கொண்டது.

அதாவது ஈரான் தனது உயிர்வாழ்வுக்காக போராட தயாராக உள்ளது. ஆனால் அமெரிக்கா நேரிடையாக மோதுமா அல்லது வேறு உத்திகளை பயன்படுத்தி போரை வெல்லுமா என்பது தான் தற்போதைய கேள்வி. ஏனெனில் இந்த போரில் அமெரிக்கா தோல்வியடைந்தால் அது மத்திய கிழக்கின் படைவலுச் சமநிலையை தலைகீழாக புரட்டிப்போடும்.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .




# தாயகமும் வாழ்வும்



